1259

நவமணி.

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ 1½

எல்லாம் தெய்வச் செயல்

ஆசிரியன் சி.ரா.ம இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரஜோற்பத்தி-வரு ஐப்பசி-மீ No 10.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்.	361
2.	இந்தியர்களின் நம்பிக்கை (தலையங்கம் பத்திராதிபர்)	363
3.	சிநேகம் ஸ்ரீ நாராயணன்.	368
4.	கனகவல்லி அல்லது கள்வர்கவர்ந்த கன்னிகை கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.	372
5.	தேகபலம். திருச்சி ஸ்ரீ. வீ. மீ.	375
6.	ஆதீனமழகி அல்லது மடாலய மர்மம். திரிசிரபுரம் வரகநகர் வாகனி, திரு. சவரிநாதன் B. A.	378
7.	மகாத்மா திருவிளையாடல்கள்.	382
8.	பேதமற்ற போதம். தென் ஆப்ரிக்கா, டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.	383
9.	கல்விமுறை. வடிவேலன்.	385
10.	கடவுளும்—காந்தியடிகளும்.	388
11.	பொன்மொழி.	392
12.	விகடத்துணுக்குகள்.	393
13.	மதிப்புரை.	397
14.	விசேஷச் செய்திகள்.	400

நமது ஆசிரியர்.

நமது 'நவமணி' ஆசிரியர் சி. ராம, இராமனுதை முதலியார் அவர்கள் 'நவமணி' யின் அபிவிர்த்தி பற்றிய வேலையைக் கவனிப்பதற்காக இம்மாதம் மலாய்நாட்டிற்கு செல்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

மானேஜர்

"நவமணி" பத்திரிகாலயம் பள்ளத்தூர்.

7 DEC

கடவுள் வணக்கம்.

தனதனன தான தான தந்தன
தனதனன தான தான தந்தன
தனதனன தான தான தந்தன   தந்ததான.

படர்புவியின் மீது மீறி வஞ்சர்கள்
வியனினுரை பானு வாய்வி யந்துரை
பழுதில்பெரு சீல நூல்க ளுந்தெரி   சங்கபாடல்
பனுவல்கதை காவ்ய மாமெ ணெண்கலை
திருவளுவ தேவர் வாய்மை என்கிற
பழமொழியை ஓதி யேயு ணர்ந்துபல்   சந்தமாலை
மடல்பரணி கோவை யார்க லம்பக
முதலுளது கோடி கோள்ப்ர பந்தமும்
வகைவகையி லாசு சேர்பெரு ருங்கவி   சண்டவாயு
மதுரகவி ராச னெனென் வெண்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசையொடு லாவு மால கந்தைத   விர்ந்திடாதோ
அடல்பொருது பூச லேவி ளைந்திட
எதிர்பொருவொ ணுமலேக சங்கர
அரகர சிவாம காதெ வென்றனி   அன்றசேவித்
தவனிவெகு கால மாய்வ ணங்கியுள்
உருகிவெகு பாச கோச சம்ப்ரம
அதிபெல கடோர மாச லந்தா   ணைந்துவீழ
உடல்தடியு மாழி தாவெ னம்புய
மலர்கள்தச நூறு தாளி டும்பகல்
ஒருமலரி லாது கோவ ணிந்திடு   செங்கண்மாலுக்
குதவியம கேசர் பால இந்திரன்
மகளைமணா மேவி வீறு செந்திலில்
உரியவடி யேனை ஆள வந்தருள்   தம்பிரானே.

சந்தாதார்களுக்கு அறிவிப்பு.

நமது 'நவமணி'க்கு மிகக் குறைந்த சந்தாவான ஒரு ரூபாய் சந்தாவையும் சிலர் பாக்கியாக வைத்துக்கொண்டு பத்திரிகை அனுப்பி வாருங்கள், பணம் அனுப்புகிறோமெனச் சொல்லுகின்றனர். வருஷம் முடிந்து வி. பி. யனுப்பும் பொழுது வி. பி. யையுந் திருப்பிவிடுகின்றனர். எங்கள் சந்தாபாக்கி நஷ்டத்தோடு போஸ்டாபீஸிர்க்கும் கொஞ்சம் பணங்கொடுத்து நஷ்டப்படவேண்டியிருக்கிறது. அதனால் இம்மாதம் சந்தாப் பணம் வராதவர்களின் பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. வேண்டுவோர் முன்பணமனுப்பியே பத்திரிகையைப் பெறவேண்டுகிறோம். பழைய பாக்கியுள்ளவர்கள் நாளது தேதிவரையுள்ள பாக்கியையாகிலும் அனுப்பி உபகரித்தால் நலமாகவிருக்கும். பத்திரிகை நடப்பதற்குச் சந்தாதாரரே உயிர்த்துணைவராகையால் அவர்கள் பணமனுப்பாமலிருந்துவிட்டால் எங்ஙனம் பத்திரிகையை அனுப்பமுடியும்? எனவே, தயவுசெய்து எல்லோரும் முன்பணமனுப்பி உபகரிக்க வேண்டுகிறோம்.

வெளிநாட்டுச் சந்தாதார்களுக்கு.

நமது ஏஜண்டு சென்ற வருடம் மலேயாவில் வந்து பணவசூல் செய்தவகையில் பணஞ்செலுத்திய சித்தியவான், தைப்பிங், புருவாஸ், ஈப்போ முதலிய ஊர்களிலுள்ளசந்தாதார்களுக்கும் அவ்வூர்களிலிருந்து பணங்கட்டியதாய் நாட்டுச் சந்தாதார்களுக்கும் சென்ற மாதத்தோடு சந்தாத்தொகை முடிவுற்றுவிட்டது. இந்த மாதம் அவர்களுக்கு அதிகமாகப் பத்திரிகை அனுப்பியுள்ளோம். மலாக்கா, கோலாலம்பூர், பேரு, சிங்கப்பூர் முதலான ஊர்க்காரர்களுக்கும் அடுத்தமாதத்துடன் சந்தாத்தொகை முடிவுறுகிறது. எனவே, இவ்வூர் அன்பர்கள் இச் சொல்ப தொகையாகிய ஒரு வெள்ளியை மணியார்டரில் அனுப்பி உபகரித்து மீண்டும் 'நவமணி'யைத் தொடர்ந்துபெற வேண்டுகிறோம்.

மானேஜர்

"நவமணி" பத்திரிகாலயம், பள்ளத்தூர்.

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவ மணி;'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. பாரதியார்

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. திருவள்ளுவர்

மாலை 2. } பள்ளத்தூர் பிரஜோற்ப, ஐப்பசி { மணி 10.

இந்தியர்களின் நம்பிக்கை.

வட்டமேஜை மஹாநாட்டிற்கு மஹாத்மாஜீ சென்று போராடிய பின்னர் பிரிட்டிஷார்பால் இந்தியர் கொண்டிருந்த நம்பிக்கை வரவாக் குறைந்துகொண்டே வருகிறது. வட்டமேஜையில் மஹாத்மாஜீயவர்கள் ஆண்மையோடு குறித்தபடி நாங்கள் இந்தியாவிற்கு அளிக்கும் சுயேச்சை இத் தன்மையானது. இவ்வளவுதூரம் இன்னின்ன விஷயங்களில் விட்டுக் கொடுக்க முடிவுசெய்துள்ளோம். அதற்குத் தகுந்தபடியான தீர்மானங்களைச் செய்யுங்கள் என்ற ஓர் எல்லை இல்லாமல் பல சப் கமிட்டிகளை நியமித்து ஒவ்வொன்றையும் பரிசீலனைசெய்து முடிவுகள் செய்யச்சொல்லிவிட்டனர். இதில் பல பிரிவுகளும் கக்ஷிகளும் நேர்ந்துள்ளன. சில சப் கமிட்டிகள் மாறுபட்ட அபிப்பிராயங்கொடுத்துள்ளன. சில ஒற்றுமையான அபிப்பிராயங்கள் கொடுத்துள்ளன.

ஃ ஃ ஃ

மஹாத்மாஜீயவர்களின் வேண்டுகோளின்படி ஒரு முடிவும்

சரியான முறையில் கூறப்படாததால் மஹாத்மாஜீ எவ்வளவு தூரம் எதிர்பார்த்துச் சென்ருரோ அவ்வளவு தூரமே அங்கு நடந்தது கண்டு வெளியிடங்களுக்கு விஜயஞ்செய்யவும் ஏனை யோர்களைக் கலந்து பேசவும் பொதுக்கூட்டங்களில் நிலைமையை எடுத்துவிளக்கவும் வேண்டிய வேலைகளில் ஈடுபட்டுத்தான் சென்ற முக்கிய வேலையில் அதிக கவனஞ் செலுத்தாமலிருக்கின் ருர்கள். இது யாவருக்கும் நன்கு தெரியுமாயினும் சில சில காலங்களில் அவர் வட்டமேஜையில் கலந்து கொள்வது கண்டு இதுதான் அவர் வேலையோ வெனச் சிலர் திருப்தியும் கொள்ளு கின்றனர்.

ஃ ஃ ஃ

உண்மையில் சில சப் கமிட்டிகள் போதிய அளவில்லாது போயினும் ஒரோர் வகையில் திருப்தியடையக்கூடிய முடிவுகளைக் கண்டிருக்கின்றதாயினும் அது எவ்வளவுதூரம் பிரிட்டிஷ் சர்க் காரால் ஒப்புக்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வரும் என்ற விஷயமாக இந்திய மக்கள் ஐயுறும் பொழுதும் சில சமயங்களில் பிரிட்டிஷ் சர்க்கார் பிரதம நிர்வாகிகள் பேசும் பேச்சுக்களிலிருந் தும் அம் முடிவுகள் வீணுகுமோ வென அஞ்சவேண்டிய நிலைமை யிலிருப்பதாலேயே இந்தியமக்கள் வட்டமேஜையில் வைத்திருந்த நம்பிக்கை பெரிதும் குறையக் காரணமானதோடு அவடம் இந்தியப் பிரதிநிதிகள் வேலையை முன்போல் சுறுசுறுப்புடன் செய்யாமல் தயங்கவும் காரணமாயிற்று.

ஃ ஃ ஃ

சமீபத்தில் வட்டமேஜையில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங் களாலும் பிளவுபட்ட அபிப்பிராயங்களாலும் பலவிடங்களிலும் வட்டமேஜையின் வேலை பலனற்றதாகிவிட்டதென்ற உணர்ச்சி பெரிதும் உண்டாகி வட்டமேஜை மஹாநாடு முறிந்தது என்ற பிரசுரம் இந்தியப் பத்திரிகை உலகில் வெளிவந்துவிட்டன. அத் துடன் மஹாத்மாஜீ உடனே அப்பிளவுகள் காரணத்தால் வட்ட மேஜையிலிருந்து வெளியேறுவரா வென்றும் கூச்சல்கள் கிளம்பி விட்டன. மஹாத்மா வட்டமேஜை மஹாநாட்டிற்குச் செல்ல மறுத்ததன் முக்கிய காரணம் இதுவே யாகும். ஆயினும் யாவரும்

வேண்டிக்கொண்டதற் கேற்பவும் ஓர் கால் நேரேசென்று விஷயத்தைச் சொன்னால் உண்மையுணர்வர்களா என்ற சந்தேகத்தின் பேரிலுமே அங்கு சென்ற மஹாத்மா ஓர் முடிவு காணும் வரை இருந்துவருவ தென்றே நிச்சயித்துவிட்டார்கள்.

ஃ ஃ ஃ

மஹாநாட்டை ஒத்திவைக்க ஒப்புக்கொள்ளாமல் தொடர்ந்து நடத்தி முடித்துவிடவேண்டுமென்று எவ்வளவோ வேண்டிக்கொண்டும் மஹாத்மாஜீயின் இவ்வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டு மஹாநாடு நவம்பர் 5-உ க்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்று வரை சில்லறை விஷயங்களைக் கவனித்துவிட்டு நவம்பர் 5-உ முதல் 10-உ வரை தொடர்ந்து மஹாநாட்டை நடத்திவிடுவதென்ற முடிவில் பெரும்பாலோரு மிருக்கின்றார்களாகையால் அதற்குள் மஹாத்மாஜீ வட்டமேஜையிலிருந்து வெளியேறாமல் கடாசிவரை நமது கோரிக்கையை எடுத்துரைத்துவிட்டு வருவதுதான் நலமே யல்லாமல் மத்தியில் வெளிவருவதால் ஓர் விசேஷ பலனும் கிட்டப்போவதில்லை.

ஃ ஃ ஃ

இந்தியாவிற்கு சுதந்தரங்கொடுக்க ஏற்பட்ட வட்டமேஜை மஹாநாடு கூடுமுன் பிரிட்டிஷார் இந்தியர்களையும் தங்கள் போன்ற மக்கள், நமக்கும் அவர்களுக்கும் எவ்வித வித்தியாசமும் ஆளுவோர் ஆளப்படுவோர் என்ற நிலைமையில் கிடையாது என்பதை நன்குணர்ந்து அவர்கள் நாட்டில் நாமும் நமது நாட்டில் அவர்களும் பரஸ்பரம் சமரஸ நோக்குடனும் ஒற்றுமையோடும் ஒத்துழைக்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்திருக்க வேண்டும். அப்பரந்த எண்ணம் அவர்களுக்கில்லையேல் இவ்வளவு பெருந்தொகையைச் செலவுசெய்து இக்காரியத்தைச் செய்திருக்கக்கூடாது.

ஃ ஃ ஃ

அப்படியல்லாது மஹாநாட்டைக் கூட்டியவர்கள் தாங்கள் இந்தியாவில் இந்தியரின் கீழ்வேலை பார்க்கமுடியாதெனப் பல சமயங்களிலும் பேசிவருவது மிகுந்த ஆச்சிரியத்தைக் கொடுக்கக் கூடியதாகவிருக்கின்றது. அக்டோபர் மத்தியில் வட்டமேஜை அங்கத்தினர்களில் முக்தியஸ்தர் சிலரைவைத்துக்கொண்டு

தற்பொழுதைய இந்தியா மந்திரி ஸர். சாமுவேல்ஹோர், இந்திய ராணுவப்பிரச்சினை சம்மந்தமாகப் பேசிய பேச்சின் முடிவான அபிப்பிராயம் இந்தியரின்கீழ் பிரிட்டிஷ் சிப்பாய்களோ உத்தியோகஸ்தர்களோ கீழ்ப்படிந்து சரியாக நடக்கமாட்டார்களென்பதை நன்கு வலியுறுத்துகின்றது. அதற்காக இராணுவத்தில் இந்தியர் மயமான சில படைகளை நிறுவி அதை ஓர் இந்திய உத்தியோகஸ்தர் கையில் கொடுப்பதென்ற பேச்சுமேல் நிற்கிறதாகத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

இப்பொழுதுள்ள ராணுவச்செலவே தாங்கமுடியவில்லை குறைத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தியப் பொதுஜனங்கள் மன்றாடும்பொழுது இந்திய சுயநிர்ணயத்தை நிலைநிறுத்தக்கூடிய வட்டமேஜை மஹாநாட்டினர் புதிய ராணுவமொன்றை நிர்மாணித்து அதை இந்திய மயமாக்கி இந்தியரின் நிர்வாகத்தில் விட்டுவிடுவது என்று முடிவுசெய்வார்களானால் இந்த முடிவை என்னவென்று சொல்லுவது? இப்பொழுதுள்ள செலவைக் குறைத்து சௌகர்யஞ் செய்யக்கூடிய கூட்டம் புதிய செலவினங்களுக்கும் வழிகாட்டியது போலாகுமல்லவா? சுதந்தர நாட்டில் இருவகை ஆட்சியிருந்தால் தான் அச்சுதந்தரத்திற்குப் பெருமைபோலும். இதெல்லாம் இந்தியர் நிர்வாகிகள்மேல் கொண்டுள்ள நம்பிக்கையை அதிகப் படுத்துவனவா?

ஃ ஃ ஃ

பிள்ளையார்பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல் வட்டமேஜை மஹாநாட்டை அண்டப்போய் இந்திய சமூகப் பிணக்குகள் வளர்கின்றன. புதிய பிணக்குகளும் உண்டாகின்றன. அந்நிய ஆட்சியில் பிளவுபட்டிருந்தபலநாடுகள் சுதந்தரம்பெற்ற பின்னர் இவ் உள்நாட்டுச் சண்டைகள் தொலைந்து ஒற்றுமையோடும் தாராள மனப்பான்மையோடும் நடந்துகாட்டி முன்னேற்றமடைந்துள்ளன என்பதற்குப் பல சரித்திர ஆதாரங்கள் காட்டமுடியும். உண்மையில் இவையெல்லாம் அடிமை நாட்டிலேதான் வளருமே தவிர சுதந்தரநாட்டில் இப்பிணக்குகள் ஏற்படவே மாட்டாதென்பதை இந்தியர் பெரிதும் இப்பொழுதைய நடவடிக்கைகளிலிருந்து நம்புகின்றனர். இந்தியா சுதந்தரம்பெற்றால் இவை தானே தொலைந்துபோய்விடுமென அவர்கள் நிச்சய எண்ணங்கொண்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

பல்வேறு வகையிலும் இந்தியர்களை அடக்கித் தாங்கள் உயர்ந்தவர்களாகவே இந்நாட்டில் வாழுந்தோறும் நிர்வகிக்குந் தொல்லை அவர்களுக்கே தவிர நமக்கல்ல. அதைவிடுத்துத் தாராள மனத்தோடும் சமரச நோக்கோடும் நடந்துகொள்வார்களே யானால் இந்தியர் பெரும் நன்றியறிதலோடும் சினேகத்துடனும் உதவுவார்கள். இப்பொழுது வட்டமேஜையின் முடிவு பிரயோ ஜனமற்றுவிடின் இந்தியர்களின் உதவியையும்பிரிட்டிஷாரிடமுள்ள நம்பிக்கையையும் இந்தியர் இழக்க நேரிடும். எனவே, இதுவரை பேசப்பட்டவைகள் எவ்வாறிருப்பினும் முடிவாயினும் சரியான முறையிலிருக்குமா என்பதை இந்தியர் அரியவிரும்புகின்றனர்.

ஃ ஃ ஃ

ஓர் புறம் லண்டனில் இந்திய சுய நிர்ணயக் கொள்கையை நிர்மாணிப்பதற்குக் கூட்டம் நடத்திக்கொண்டிருக்கும்பொழுது இங்கு புதிய புதிய அவசரச் சட்டங்களையும் வரி உயர்வையும் சிருஷ்டிப்பது இந்தியர் நம்பிக்கை குறையமற்றோர் காரணமாகின்ற தல்லவா? இதையெல்லாம் தீர யோஜனைசெய்து வட்டமேஜையின் முடிவை பிரிட்டிஷார் ஆழ்ந்த சிந்தனையில் சமரசமாகச் செய்வார் களாயின் நலமாகவிருக்கும்.

ஜனத் தொகை.

இந்தியாவில் மொத்தம்.	35,29,86,876.
இதில் ஆண்கள்.	18,19,21,914.
பெண்கள்.	17,10,64,962.
ஹிந்துக்கள்.	23,83,30,912.
முஹம்மதியர்கள்.	7,77,43,928.
சீக்கியர்கள்.	43,66,442.
கிருஸ்தவர்கள்.	59,61,794.

(இதரர் பிறமதஸ்தர்கள்.)

சென்னை.

மொத்த ஜனங்கள்.	4.65,75,670.
இதில் இந்துக்கள்.	4,03;92,900.
முஸ்லீம்கள்.	33,16,083.
கிருஸ்தவர்கள்.	2,05,009.

குறிப்பு:— இது சர்க்கார் அறிக்கை. இதன்படி சென்ற 10 வருஷங்களில் இந்துக்கள் 100-க்கு 10-ம் முஸ்லீம் 100-க்கு 13-ம் சிக்கியர் 100-க்கு 33 பேரும் அபிவிர்த்தியாகியுள்ளனர் எனத் தெரிகிறது.

சிநேகம்.

ஸ்ரீ நாராயணன் எழுதுவது.

'செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு"

கடல்சூழ்ந்த இங்கிலவுலகின்கண் மானிடராய்ப் பிறந்த நமக்கு உற்ற துணையாகச் சிநேகிதரைப் பெற்றிருக்க வேண்டியது அத்யாவசியம். நாம் சம்பாதிக்க வேண்டிய பொருள்கள் பலவற்றுள்ளும் சிநேகம் போலப் பிறிதோன்றில்லை யென்பது அறிஞர் துணிபாம் யார் தக்க சிநேகிதரைப் பெற்றிருக்கின்றாரோ அவர் பகைவரால் வெல்லப்படத் தக்கவரன்று.

என்னெனின், வருந்துன்பங்களை நீக்கி அத்துன்பங்கள் வாராமல் காக்க வல்லவர் பெரியோராதலின், ஒருவன் அவரைச்சிநேகிக்கக் கடவன். இதற்குச் சான்றுகள் பலவுள. ஈண்டு இரண்டொன்றைக்குறிப்பிடுகின்றோம்.

"உற்றநோய் நீக்கி யுறா அமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்" (திருக்குறள்)

எனத் தேவர் திருவள்ளுவரும்,

"பெரியாரைத் துணைக்கொள்" (ஆத்திசூடி)

என அருந்தமிழ் மூதாட்டி ஔவையாரும்,

"தவத்தோரடைக்கலந் தான்சிறி தாயினு
மிகப்பே ரின்பந் தருவது கேளாய்" (சிலப்பதிகாரம்)

என இளங்கோவடிகளும்,

"இம்மையடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலான்-மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டா ரெனப் படுவார்" (அறநெறிச்சாரம்)

என முனைப்பாடியாரும், கூறிய அறவுரைகளேயாம்.

இதனால் மேன்மக்கள் சொற்கேட்டு "மூத்தோர் சொல் வார்த்தையமிர்தம்" என்ற அவர் சொல்வழி நின்று உத்தம சிநேக

ருடன் உறவு கொண்டாடுவது நன்மையடைவதற் கேதுவாமென் பது நன்கு உணரலாகும். அன்றியும்,

"ஆசிரியன் சொற்கேட்ட வன்றே தயரதனார்
கோசிகன்பா லிராகவனைக் கூடியதாற்—றேசு பெற்றார்.

என்ற "ஆத்திசூடி வெண்பா"வால் உத்தம சிநேகராகிய பெரியாரை நாம் விடாது நட்புக்கொண்டு நன்மையடைதல் வேண்டுமென்பது மேலும் வற்புறுத்தப்பட்டது. இங்ஙனமில்லா மல், "அற்ப சிநேகம் பிராண சங்கடம்" என்பதைப்போல், யோக் கியர் இன்னார், அயோக்கியர் இன்னார் என்று தேராமலும், தெளி யாமலும்

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு."

என்பதையுங் கவனியாமலும், யாதோர் நலனுமற்ற சாமான்ய ரிடத்து நட்புக்கொண்டு ஒப்பற்றஒருமுதற்றனிக்கடவுளின் அருங் கருணையால், சிறிதுடைத்தா யிருக்குங் கல்வியையும், செல்வத்தை யும், அதனாலுண்டாகிய கௌரவத்தையும் இழந்து, சான்றோர் நகைப்புக்காளாகி, நன் மார்க்கத்தை நழுவ விடுதல் பேதமையின் பாற்படும்.

எனவே, நாம் எப்பொழுதும் நற் சிநேகிதத்தைக் கைக்கொள்ள நாடவேண்டும். இங்ஙனம் கைக்கொள்ள விரும்பும் நட்புக்கு "மித்ரத்வம்" எனப்படும். இந்நட்பு பசு, பட்சி முதலியவைகளி டத்துஞ் சிறந்து விளங்குவதால், சகல ஜீவ வர்க்கத்திற்கும் பொது வான குணமென்னலாம். எல்லா ஜீவனிடத்தும் பொதுவாயுள்ள தருமம் எதுவோ, அதனைத் தெய்வீகக் குணங்களில் ஒன்றெனக் கூறுதல் சகஜம். அவ்வித குணத்தையுடையவர்கள் யாரோ, அவர் களே சிநேகத்திற் குரியவராவார்கள். அவர்களுடைய சிநேகமே இறுதிவரை நிலை பெறும்.

இங்ஙனம் சினேகிக்கப்படும் நட்பை மூவகையாகப் பெரியார் பெயர் கூறுவர். அவைமுறையே முதல், இடை, கடை எனப் படும்.

உத்தம நட்பாவது:—சிநேகனுடைய பெயரைக் கேட்ட மாத் திரத்தில் உள்ளம் பூரித்து இன்பம் ததும்புதலும், சிநேகன் எதிரிலிருக்கிற பொழுதும், இல்லாத பொழுதும், ஒரே மாதிரி யான மரியாதை செலுத்துவதும், அவனைச் சதா நினைத்துக் கொண்டிருப்பதுமாம்.

மத்திம நட்பாவது:—சிநேகிதனைக் கண்டபொழுது மகிழ்தலும், பிரிந்த பொழுது மறத்தலும், கண்டால் ஒருவிதமும், காணாத பொழுது ஒருவிதமுமாயிருத்தலாம்.

அதம நட்பாவது:— ஒரு உபாயத்தைப் பற்றிச் சிநேகித்தலும் தன் மனக்கருத்தை வெளியிடாமல் சிநேகிப்பதும் சமையத்திற்குத் தக்கப்படி நடத்தலுமாம்.

யாதொரு பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் மனம் ஒற்றுமைப்பட்டுச் சிநேகிப்பதாகிய தலை நட்பே எவற்றினுஞ் சிறந்ததாம். இந் நட்பினைத் தொன்று தொட்டு சிநேகம், "தொடர்பு" "கேண்மை" எனப் பெயரிட்டு அழைப்பது உலக வழக்கம். இவ் வழக்கமின்றி இத்தொடர்பை இயற்கை நட்பெனவும், செயற்கை நட்பெனவும் இருவகையாகக் கூறுவர். இயற்கை நட்பானது உதிர சம்மந்தமாய்ப் பண்டு தொட்டுள்ள சுற்றத்தாரையும், செயற்கை நடப்பானது பிறர் நமக்குச் செய்த ஓர் உதவிபற்றிவரும் நட்பினரையுங் குறிக்கும். ஈண்டெடுத்துக் கூறுவது செயற்கை நட்பேயாகும்.

நாம் ஒருவரோடு நட்புச்செய்யப் புகுந்தால்,

"செங்கமலப் போதலர்ந்த செவ்விபோலும் வதனந்
தங்குமொழி சந்தனம் போலும்—பங்கியெரி
கத்தரியைப் போலுமிளங் காரிகையே வஞ்சமனங்
குத்திரர்பால் மூன்று குணம்"

அதாவது மெய் வேடத்தையும், வெளி நடத்தையையும், குளிர்ந்த வார்த்தையையும் பார்த்துத் திடீரென நட்பு செய்துவிடக்கூடாது. சிநேகிக்கத்தக்க குணத்தை நன்றாய் ஆராய்ந்தறிந்து ஒருவரோடு சிநேகஞ் செய்யவேண்டும். அங்ஙனம் சிநேகஞ்செய்யாவிடின், துன்பமுண்டாகுமென்பது இதன் திரண்ட பொருள். நமது ஒளவைப் பிராட்டியும் இக் கருத்தினையே கொண்டு, "நல்லிணக்க மல்லதல்லற்படுத்தும்," "இணக்கமறிந்திணங்கு" என்று மொழிவாராயினர். ஆதலின்,

"இப்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நட்புடைக் கொண்டமை யல்லது— பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று" (நாலடியார்)

ஒருவரது குடி, குலம், ஒழுக்கம் முதலியவற்றை ஆராய்ந்து அறிந்த பின்னர் சிநேகிக்கவேண்டும். அங்ஙனம் ஆராயாது சிநே

கம் செய்து விட்டால் பின்னிட்டு வருந்த நேரிடும். இதனையே தேவர் திருவள்ளுவரும்,

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந்தரும்"

என்று தமது திருக்குறளில் திறம்படக் குறித்தனராவர்.

"அறியாப்பருவத் தடங்காரோடொன்றி
நெறியல்ல செய்தொழுகியவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு" (நாலடியார்)

என்பதனால், அறிவில்லாத இளம்பருவத்தில் மூர்க்கரோடு கூடிச் செய்த தீச்செயல் கூடப் பின்னர் அறிஞரோடு கூடினால், புல்லிற்பற்றிய பனியானது வெயில் முற்றின பொழுது விலகுதல் போல் ஒழியுமென்று விளங்குகின்றது. ஆனதால், ஒருவன் அறியாமையினால் மூடர் இனத்தில் பயின்று, கெட்ட செயல்களைச் செய்தானாயினும், புத்தியுண்டானபின் அறிவுள்ளாரோடு கூடிநன் மார்க்கத்தில் நடந்து நலம் பெறலாம்.

"கடையாயார் நடப்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கினனையர்—தலையாயா
ரெண்ணரும் பெண்ணைபோன் றிட்ட ஞான்றிட்டதே
தொன்மை யடையார் தொடர்பு" (நாலடியார்)

கமுகுஇடைவிடாமலும், தெங்குஇடைவிட்டும், போற்றிவளர்த்தல் செய்துவரின் பயன் தருமாதலால், அவைமுறையே வேண்டியவற்றை இடைவிடாது தருபவரிடத்து நட்புச் செய்யும் கடைமையானவருக்கும், பனைவிதை நட்டு முதல் நாள் நீர்வார்த்தலொன்றுமே செய்யின் பயன் தருவதாதலால், அது சிறிதுதவி செய்யின் மிக்க நட்புச்செய்யும் தலையானவருக்கும் உபமானமாக்கப்பட்டது.

இதனால் அதமர், சிநேகித்த நாள் முதல் தமக்கு உபகாரஞ் செய்து உபசரிப்பவரிடத்திலேதான் சிநேகித்திருப்பர். அவற்றில் சிறிதுதவறினும் சிநேகம் போய்விடும். மத்திமர், சிநேகித்த பின்னர் சிறிது உதவினால் பின்னர் நமக்குச் சமயம் நேர்ந்தபோது அவரும் சிறிதுதவி உபசரிப்பர்.

உத்தமர் சிநேகம், உண்டானதினமுதல் யாதொரு பயனையும் எதிர்பாராமல், விருத்தியாய்ப் பெரும் பயன்றரும் என்பது போந்த பொருள்.

ஆதலால் நற்குடியிற் பிறந்து நல்வழிப்பட்டு, நல்லறிவுள்ளாரோடு கூடிச் சிநேகித்திருப்பதே தகுதியாம்.

கனகவல்லி.

அல்லது

கள்வர்கவர்ந்த கன்னிகை.

கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்
அவர்கள் எழுதியது.

(முன் தொடர்ச்சி)

அங்ஙனம் வீழ்ந்த சுவற்றின் துவாரவழியில் மகமதியப் படைகள் மந்தை மந்தையாகக் கோட்டையுள் பிரவேசித்தன. அந்தோ! அவைகள் செய்த அட்டூழியங்களை எழுதவும் கை நடுங்குகின்றது. இது பிரவேசிக்கக்கூடிய இடம், இது பிரவேசிக்கக்கூடாத இடம் என்று அவர்கள் எண்ணினர்களில்லை. இது செய்யக்கூடிய காரியம், இது செய்யக் கூடாத காரியம் என்று சிந்தித்தார்களில்லை. இது சொல்லத்தக்க வார்த்தை, இது சொல்லத்தகாத வார்த்தையென்று கருதினரில்லை. அந்தப்புரம் என்று கூசினர்களில்லை. தேவாலயமென்று பார்க்கவில்லை. சிசுக்களென்று இரங்கினரில்லை. அங்ஙனைகளென்று ஆலோசித்தாரில்லை. செய்யவேண்டிய தீங்குகளனைத்தையும் திறமையாகச் செய்து முடித்தார்கள். நானூறு ஆண்டுகளாக காகதீய வமிசத்தின் ஆதீன பலத்தால் ஆதரிக்கப்பட்டு அந்நிமிஷம் வரையும் பிரதாப ருத்திரன் சுவாதீனத்திலிருந்த ராஜ்ய லட்சுமி க்ஷண நேரத்தில் பகைவர் வசமாயினள். அவளுடன் பட்டினமும், அவர்கள் சுவாதீனமாயிற்று. பட்டினத்துடன் ராஜகிரகமும் அவர்கள் பக்கலாயிற்று. ராஜகிரகத்துடன் இராஜேந்திரனாகிய பிரதாப ருத்திர தேவனும் அம்மாற்றலர்கைகளால் பந்திக்கப்பட்டான். என்னே வாழ்க்கை நிலையிருந்தவாறு!

யானையெருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்-மேனை

வினையுலப்ப வேருகி வீழ்வர் தாங்கொண்ட
மனையாளை மாற்றூர் கொள" நாலடியார்.

என்ற செய்யுளின் பொருளுக்கேற்ப ஆற்றல் மிக்க அரசர்களிடத்தும் செல்வம் நிலை பெருதழிந்து சிறுமை நேருமாயின், ப்ழவினையின் கொடுமை மிக வலிமையுடைத் தென்னலாம். முன்னர், தங்களுடைய படைகளுக்கும், வலிய பீரங்கிகளுக்கும் சிறிதுந் தளராமலும், சிதறிப் பெயராமலும் இருப்புச் சுவர்போல் அசைவற்று நின்ற ஓரங்கல் கோட்டை இப்பொழுது எளிதாக நிலத்தில் சரிந்து வீழ்ந்ததற்கும், நகரப்பிரவேசம் வெகு சுலபமாகக் கிடைத்ததற்கும், வெற்றி விரைவாகக் கை கூடியதற்குமாகப் பகைவர் ஆனந்த மடைந்தனர். அன்றியும், மகமதியர்களுக்கும், மகமதியப் பிரதாப மென்னும் சர்ப்பங்கட்கும், கோடை இடி போன்றவனும், பூலோக தேவேந்திரன் என மதிக்கப்பட்டவனும் நிரம்பிய கீர்த்திமானுமான பிரதாப ருத்திரதேவன் தம் வசமாய்ச் சிறைப் பட்டதற்குப் பேரானந்தப் பெருவாருதியில் ஆழ்ந்தனர். இவ்வாறு சிறைப்பட்ட பிரதாப ருத்திரதேவனைத் தங்கள் அரசர் சுல்த்தானுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டுமென்று அங்குச் சிறிதுந் தாமதியாமல் உடனுக டில்லிக்குக் கொண்டு சென்றனர்.

பிரஜைகளுக்குப் பிராணன் போல் விளங்கிய பிரதாப ருத்திரன் ஓரங்கல் நகரம் நீங்கியதும் அந்நகரம் ஜீவனற்ற தேகம் போலாயிற்றென்பதைவிட வேறு கூறத் தோன்றவில்லை. கை, கால், கண், மூக்கு, காதுகளிருந்தும் உடலில் உயிரில்லாத போது உடலின் உறுப்புகள் பயன்படாதது போல், சில சேனைகளும், சேனையின் தலைவர்களும், யானை, குதிரை, தேர், காலாட்கள் அக்கோட்டையிலிருந்தும் பயனற்றவையாகவே யிருந்தன. ஓரங்கல் அரியாசனத்திருந்த தேகம் எழுந்து சென்றதும் ஆத்மாவும் அதனுடன் போயிற்று. ஜீவகளை தொலைந்தது. மங்களம் மறைந்தது. ஜோதி சூன்ய மாயிற்று. கலாமகள் கொலு வீற்றிருந்த அழகிய வீடுகள் திருநீங்கி தரித்திரா தேவி தாண்டவ மாடினள். நகர மாந்தர் உற்சாகம் நீங்கி உறக்கமேற்கொண்டார்கள். பகைவர்கள்

பராக்கிரமங்களைப்பற்றியே எங்கும் பேச்சாயிருந்தது. நகரமுழுதும் கோ வென்ற பேரொலியுண்டாயிற்று. ஓரங்கல் குடி மக்கள் அரசன் பொருட்டு அழுது புலம்பியது. அவர்கள் தங்கள் பந்துமித்திரர், நெருங்கிய உறவினர்கள் ஆவி பிரிந்ததற்குத் துக்கங் கொண்டாடியது போலிருந்தது. அல்லாமல் அவர்கள், இச்சமயத்தில் ராஜ குடும்பத்தையும், சாம்ராஜ்யத்தையும், பழைமை போல் நிலை நிறுத்தக்கூடிய பலவானும், கூரிய அறிவினனும், சமயோசித சமத்காரங்களில் மிக்கானுமாகிய ஓர் வல்லவன் தேஜஸுடன் ஆகாயத்தினின்றும் இழிந்து வந்தது போல் தோன்றி சிறைப்பட்டுச்சென்ற தங்கள் அரசனை மீட்டுக்கொடுத்தால் இனிதாயிருக்குமென்று பிரார்த்தித்துக் கொண்டும் இருந்தார்கள்.

(தொடரும்)

'இந்திய மித்திரன்.'

விளம்பரஞ் செய்வோர்க்கொரு விசேஷச்செய்தி

இந்தியர்களின் குடியேற்ற நாடாகிய மலாயாவில் "இந்திய மித்திரன்" என்னும் பெயருடன் பிரதி புதன்கிழமை தோறும் இரண்டாயிரத்தி ஐநூற்றி லதிகம் பிரதிகளாக வெளியாவதும், முழு மலாயாவின் எல்லாப் பாகங்களில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா, சிலோன், சயாம், ஜாவா, சுமத்ரா முதலிய வெளிநாடுகளிலும் விசேஷமாகப் பரவியுள்ளதும் மலாயாவிலிதற் கிணையில்லை யெனக் கொண்டாடும் கீர்த்திவாய்ந்தது மாகிய சிறந்த தமிழ்ப்பத்திரிகையில் விளம்பரஞ் செய்வோரே தமது வியாபார விருத்தியை உண்மையிற் கோருவோர்களும், உத்தேச பலனைப் பூரணமாயடையத் தக்கோருமாவார்கள். சந்தாதார்களாகச் சேருவோர்க்கும் சிந்தைகளிக்கத்தக்க செய்திகளனந்த முண்டு. வெளியூர் வருடசந்தா ரூபாய் 7—8—0 விளம்பர விகிதங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதவும்.

மானேஜர், "இந்திய மித்திரன்."

ஈப்போ. (எப். எம். எஸ்.)

தேகபலம்.

திருச்சி ஸ்ரீ வீ. மீ. எழுதுவது

உடற்பயிற்சி நிபுணர்களில் பெரும்பாலோர், மக்களின் ஆரோக்கியத்தையும்—தேக வனப்பையும்-நீடிய ஆயுளையும் நோக்கமாகக்கொண்டு பெரும் பெரும் காவியங்கள் வகுத்திருக்கிறார்கள். வைத்திய நிபுணர்களும் அந்நோக்கம்பற்றியே நூல்கள் எழுதியிருக்கிறார்கள். ஆரோக்கியமாயிருப்பவர்கள் தேகவனப்பைக் கவனிப்பதில்லை. தேகவனப்பினை யுடையவர்கள் ஆரோக்கியத்தையே யன்றி விசேஷித்த தேகபலத்தை விரும்புவதில்லை. இவைகளை உத்தேசித்து உடற்பயிற்சி விற்பன்னர்கள் தேகபலத்திற்கென்று பிரத்தியேகமான அப்பியாசங்களை வற்புறுத்தி நூல்கள் வரைந்திருக்கிறார்கள். அத்தகைய அப்பியாசங்களை அநுஷ்டித்ததின் பலனாகத் தங்கள் மார்பில் யானைகளைத் தாங்கும் பலம் பெற்று விளங்குகிறவர்களையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

ஆனால் தற்காலத்தில் விசேட பலமில்லாமலே ஆயுதபலங்கொண்டு மாபெரும் யானையினையும் ஒரே அடியில் கீழே வீழ்த்தக் கூடிய சக்திவாய்ந்துள்ள ஒரு மனிதனுக்கும்; விசேட பலமில்லாமலே அநேக யானைகளின் பளுவுள்ள பொருள்களை ஒருமிக்க உயரத்தூக்கி நிறுத்தச் சக்தி பெற்றிருக்கும் மனிதனுக்கு விசேட பலமின்றியே அத்தகைய பெருமிதமான பளுவுடைய பொருள்களை ஒருங்கே நிலத்திலும்—நீரிலும்—ஆகாயத்திலும் புயல்காற்றின் வேகத்தில் இழுத்துச் செல்லும் மனிதனுக்கும், உடற்பயிற்சியாளர் காட்டும் மகாவிசேட பலம் அவசியமாவெனச் சிலர் கேட்கின்றனர். மக்களுடைய நீடிய ஆயுளுக்கு உண்மையில் தேகபலம் காரணமாயிருக்கிறதாவெனவும் சிலர் ஐயுறுகின்றனர். நீடிய ஆயுளுக்கு தேகபலம் அவசியமெனில் அதனிலும் அதிகமான பலத்தினைப் பெற்ற எருது, சிங்கம், புலி, காடி முதலியவை மனிதனைவிட குறைந்த ஆயுள் பெற்றிருப்பதின் காரணம் என்ன

வெனச் சிலர் வினவுகின்றனர். அதுவுமன்றி மனிதனினும் குறைந்தபலம் பெற்ற ஆமை-கழுகு முதலியவை மனிதனைவிட அதிகநாள் ஜீவித்திருப்பதின் காரணம் என்ன என்கின்றனர். இவைகளை நோக்குபவர் மனிதர்களின் நீடிய ஆயுள் அவர்களின் தேகபலத்தைப் பொறுத்திருக்கிறது என்பது உண்மையாகுமா வென்ச் சந்தேகமும் கொள்ளுகின்றனர்.

மனிதன் தன் தற்காப்பின் பொருட்டுப் பலசாலியாக இருக்க வேண்டியது அவசியம் என்றால் தேகபலம் கொண்ட ஒரு பலசாலியை அவ்வளவு பலம் பெற்றிராத ஒரு குஸ்தி பயிற்சிக்காரனாவது ஜூடோ-அல்லது ஜுஜுட்சு வித்தையில் தேர்ச்சிபெற்ற ஒருவனாது, சிலம்பம் குத்துச்சண்டை முதலியவற்றில் தேறிய ஒருவனாவது எளிதில் வென்று விடுவதை நாம் காண்கிறோம். என்றும் சொல்லுகிறார்கள். இஃதே யன்றி தேகபலம் பெற்றிராத ஒருவன் பெரிய தேகபலம் படைத்த ஒருவனுடைய தேக சக்தியினைப் பல திறப்பட்ட சூழ்ச்சிகளினாலும் தந்திரங்களினாலும் செயலற்றதாக்கிவிடுகிறான். ஆகவே தேகப்பயிற்சியாளரால் விரும்பப்படும் விசேட தேகபலம் ஒருவனுடைய தற்காப்பிலும் பூரண பலன் தருவதாயில்லை எனச் சிலர் கூறுகின்றனர். மேலும் தற்காப்பு என்னும் விஷயம் உலகத்தின் இயல்பினைச் சார்ந்ததல்லவென்றும், மக்களின் அநாகரீக நிலைமைக்கே எதிர்ப்பும் தற்காப்பும் உரித்தானவை யென்றும், இதன் உண்மையினை ஒருவரை ஒருவர் கொன்று வாழும், காட்டுச் சாதியாரிடம் காணக் கூடுமென்றும் சிலர் வாதம் செய்கின்றனர்.

தேகபலத்தின் தாழ்வைக் காட்டத்தக்கவாறு நாகரீக நாடுகளில் மக்களுக்குள் மிருகத்தனமான எதிர்ப்புகள் சராசரி ஒரு நாளைக்கு எத்தனை விளைகின்றன எனச்சிலர் வினவுகின்றனர். வலியார் எளியார் என்ற பாகுபாடுகள் நாகரீக உலகத்திற்கு அடுத்தவையல்ல என்கின்றனர். "பலமுள்ள இந்தியனும் பலமற்ற இந்தியனும் என் சகோதரர்களே" என்று ஸ்வாமி விவேகானந்தர் சொல்லியிருப்பதையும்," எவ்வுயிரும் பராபரன் சன்னதியாகும், இலங்கும் உடல் உயிரனைத்தும் ஈசன் கோயில், எவ்வுயிரும் தம்

முயிர்போல் என்று இரங்கி'' இருத்தலே மக்களின் இயற்கை என்கின்றனர். மக்கள் மக்களால் எதிர்க்கப் படுவதற்குக் காரணம் அவர்களுடைய பலக்குறைவும்-மிஞ்சிய பலமும் அல்லவென்றும் விஷய அஞ்ஞானமே அதற்குக் காரணமென்றும் சிலர் காட்டுகின்றனர். உலகத்தில் யுத்தங்களை ஒழிப்பதற்கு உலக வல்லரசுகளெல்லாம் தங்கள் தங்கள் இராணுவ பலங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தப்படும். இக்காலத்தில் தற்காப்புக்கென்று மிகப் பெரிய தேகபலம்தேடவேண்டியது அவசியந்தானுவெனச்சிலர் வாதம் புரிகின்றனர். ஆகவே, மேலே கூறப்பட்ட வாதத்திற்கு வைத்திய நிபுணர்கள், உடற்கூறுசாஸ்திரிகள், உடற்பயிற்சி நிபுணர்கள் பதில் சொல்லட்டும்.

தேவை! தேவை!!

நமது 'நவமணி'க்குத் தமிழ் நாட்டிலும் பர்மாவிலும் சந்தாதாரர்கள் சேர்க்க புதிய ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். திறமையாக வேலை செய்பவர்களுக்குச் செலவிலும் ஒரு பகுதிகொடுக்கப்படும். ஆனல், ரூபாய் இருநூறு ரொக்க ஜாமீன் கட்டவேண்டும். அதற்கு அவை வட்டி கொடுக்கப்படும் அல்லது நம்மை அறிந்தவர்களைக் கொண்டு திருப்திப்படுத்தவேண்டும். இசைந்தவர்கள் உடனே மனுச்செய்துக்கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்.

நவமணி பத்திரிகாலயம்

பள்ளத்தூர்.

ஆதீன மழகி
அல்லது
மடாலய மர்மம்.

திருசிரபுரம், வரகநகர், வரகவி திரு. சவரிநாதன் B.A.,

இரவு பனிரெண்டுமணியிருக்கும். தேப்பிரம்பூர் மடாலயத்தின் அதிபதியான லீலாசிங்கர் மடாதிபதிகள் தம் படுக்கையை விட்டெழுந்து தன்னை விலையுயர்ந்த பட்டுகளால் அலங்கரித்துக் கொண்டு ஜவ்வாது பொட்டிட்டு, நிலைக்கண்ணாடியில் மும்முறை தம்மழகைக் கண்டு மகிழ்ந்து, "இன்று அவசியம் ஜெயம்பெருவேன்" என்று சொல்லிக்கொண்டே தன்னரையைவிட்டுக் கீழிறங்கினர். அவருக்கிருந்த ஆனந்தத்தில் தன்னரையை பூட்டும்படிக் கூட நினைவில்லை. வெகுவேகமாக மடாலயத்தின் பின்புறமுள்ள ஸ்நான ஜாகைகளுக்குச் சென்று அங்குள்ள ஓர் கதவைத்திறந்து, ஜாக்கிரதையாய் பூட்டிவிட்டு, படிகளின் வழியாய் சுரங்கத்திற்குள் இறங்கினர்.

லீலா சிங்கர் தன்னரையைவிட்டு ஏகியதும், ஒரு மெல்லிய உருவம் அவ்வரைக்குள் நுழைந்து தன்னிடமிருந்த சாவிகளால் மடாதிபதியின் பெட்டியைத் திறந்து, அதிலிருந்து ஓர் காகிதச் சுருளைப் பதனமாகக் கட்டி எடுத்துக்கொண்டு வெளிக்கிளம்பியது. அதற்குள்ளாக இரண்டு மூன்று சாதுக்கள் அவ்வழி வர இவ்வுருவம் சுவரில் மறைந்துகொண்டது. வந்த சாதுக்களில் பெரியவரான பரமானந்த சாது மடாதிபதியின் அரைக்குள் சென்று ஓர் கடிதத்தை கைப்பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு வெளிப்போந்தனர். அந்த மாயஉருவம் மறுபடியும் நுழைந்துக் கைப்பெட்டியைத் திறந்து அக்கடிதத்தை எடுத்து வாசித்தது, "ஆ! சண்டாளர்களே! பசுத்தோலை போர்த்திய ஓநாய்களே! வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே! உங்களுக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது" என்று வாய்விட்டு கர்ஜித்தது. சத்தத்தைக்

கேட்ட மூன்று சாதுக்களும் ஓடோடிவந்து புலிபோல் பாய்ந்து கட்டிப்பிடித்து அமிழ்த்திக்கொண்டார்கள். பரமானந்த சாது ஒரு துணியை உருவத்தின் வாயிலடைத்து, ஒரு கயிரால் கையையும் காலையும் கட்டி "அடே, புஷ்பநாதா, எங்களை யாரென்று நினைத்தாய் அற்ப பதரே, எங்களை அடியோடு தொலைத்துவிட நீ செய்யும் காரியங்கள் யாவும் எங்களுக்குத் தெரியாமலில்லை. நீ எங்களை வேசியராசை கொண்டவர்களென்றும், பைசாசங்களென்றும் பிதற்றி பாமரஜனங்களையும், படித்தும் அறிவிலா மூடர்களையும் எங்களுக்கு விரோதமாய்க் கிளப்பி, எங்கள் வயற்றில் மண்போடப்பார்த்தனை! நல்லகாலமாய் இன்று நீ அகப்பட்டுக்கொண்டனை, இனி உன்னுயிரை நீயே போக்கிக்கொள்ள வழி பார்ப்பது உசிதம்" என்றுரைத்து காரி உமிழ்ந்து, காலால் உதைத்து, ஒரு பாதாள கிடங்கில் தூக்கிப்போய் போட்டுவிட்டார்கள்.

புஷ்பநாதன் ஒரு பெரிய தியாகி. உயர்ந்த வமிசத்தில் பிறந்து, ஆங்கிலேய உயர்தரக் கல்வி பயின்று, போலிச் சன்னியாசிகளின் மாயஜாலங்களை வெளிப்படுத்தக் கங்கணம் கட்டிக்கொண்டு இராப்பகலாய் திறிந்து கடைசியில் லீலாசிங்கருடையவும் அவர் சகாக்களுடையவும் புரட்டல்களையும் கண்டு பிடித்துவிட்டார். எவ்வாறெனில்மடாலயத்தில்பிரதி ஞாயிறும் வேதநீதிகள் பெண்களுக்கும், பிரதி வெள்ளியில் ஆண்களுக்கும் சொல்லிக்கொடுப்பதாகப் பாவனைபண்ணி பொழுதுபோகும் வரை தாமதப்படுத்தி வெளியில் தனியாய்ச் செல்ல நேரிடும் பெண்களைத் தூக்கிக்கொண்டுபோய் சுறங்கங்களில் அடைத்து அவர்கள் லீலாசிங்கரின் மனதிற்கிசைந்தால் அவர்களைக் கற்பழித்தும், இசையாவிடில் அவர்களைக் கொலைபுரிந்தும், அதற்காக ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர்க்கு லஞ்சம் கொடுத்துத் தங்கள் வசமாக்கியும் தங்கள் காரியங்களை வெளிவராமல் மறைத்துவைத்திருந்ததையும் கண்டுகொண்டு அவர்களை பிடிக்கும் எண்ணத்துடனே உள் நுழைந்திருந்து அதைப்பற்றிய கடிதச் சுருளை எடுத்திருந்தார். எதிர்பாராத இவ்விபத்திற்குள்ளானதும் "கடவுளே, துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யும் எம்பெருமானே, இதுவும் நின்

திருவுளமா! நான் இவ்விதமாய் இறக்க எனக் கெவ்வளவோ மனத்திருப்தி. ஆயினும் இத்துஷ்டர்கள் எவ்விதமும் தொலைய வேண்டியதுதான். சாமியின் பெயராலும், வேதத்தின்பெயராலும், உலகத்தைக் கொள்ளை கொள்ளும் விபூதி, நாமலிங்கப் பூச் சாண்டிகளெல்லாம் ஒழிந்து, அகப்பற்று புறப்பற்று ஒழிந்த மகாமுனிவர்கள் தோன்றி வேதத்தை போதித்தால் தான் என் ஆன்மா திருப்தியடையும். அதுவும் வெகுசீக்கிரம் நடைபெறும்'' என்று சொல்லித் தன்னைத் தேற்றிக்கொண்டு பற்களால் தன்னைக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்துக்கொண்டு பாதாள கிடங்கின் சுவர்களை நாற்புறமும் தடவினார். ஒருபலகைபோன்ற சுவர் தென்பட்டது. தன் பலங்கொண்டமட்டும் அதை உதைக்கவே அது உடைந்துகொண்டது. அதன் வழியாய் அவர் வெளியே வர, மற்றொரு அறைக்குள் வந்தார். அவரைக் கண்டதும் பயந்து நடுங்கிக்கொண்டிருந்த ஓர் மாது "ஓ" வென்றலறினாள். அவர் அவளை சாந்தப்படுத்தி தான் அவளைக் காப்பாற்றுவதாக வாக்களித்து, அவ்வறையிலுள்ள மஞ்சத்தின்மேல் அவளை சயனிக்கச் செய்துதான் அதனடியில் ஒழிந்திருந்தார்.

நிற்க, சுரங்கத்தினுள் நுழைந்த லீலாசிங்கர் மஞ்சனத்தினடியில் கருடனைக் கண்ட நாகம்போல் பதுங்கிக்கொண்டிருந்த ஒரு மாதைக்கண்டார். உடனே அவர் ஆனந்தமாய் சிறித்து "கண்ணே லீலா, ஏன் இன்னும் இந்தப்பிடிவாதம்! உன்வயிராக்கியத்தால் உடம்பை நலித்துக்கொள்ளுவதால் என்ன பயன்? ஏறிப் பஞ்சணைமீதில் என்னை அணைவாய்'' என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட நங்கை அடியுண்ட நாகம்போல் சீறி "ஏழைகள் கண்ணீரும் கம்பலையுமாய் தவிக்க, அவர்கள் கொடுக்கும் பிச்சைக் காசில் புரண்டு, மதபாடங்கள் கேட்கவரும் மங்கையர்களை கெடுத்து உலகத்தை ஏய்த்துக்கொண்டிருக்கும் அற்பனே; என் கற்பையிழப்பதைவிட நான் நானிலத்தில் இறக்கத் தயார்'' என்றாள். மடாதிபதிமேலும் மேலும் சிறித்து "உன்னை காப்பாற்ற இங்கு யார் வரமுடியும்? உன்கணவன் நீ இங்கிருக்கிறாயென்று நினைக்கக்கூடமுடியாது. உனக்கிஷ்டமில்லாவிடினும்நான் உன்னைக் கட்டாயமாய்...'' என்று சொல்லிக்கொண்டு அவள்மேல் பாய்ந்

தான். கற்பென்னும் லீலிமலரை ஆபரணமாக அணிந்த அந்நங்கை கடவுள்மேல் பாரத்தைப்போட்டு அவனைத் தள்ளினாள். அவள் கைகள் இரும்பு பலம்கொண்டன. மடாதிபதி "இருக்கட்டும். நாளை நீ என்னிஷ்டப்படி நடவாவிடில் உன்னை எமலோகம் அனுப்பிவிடுவேன்" என்று கர்ஜித்து, பக்கத்தறையைத் திறந்து உள்ளே நுழைந்தார். அவ்வறையில்தான் புஷ்பநாதரும், முன் கூறியமாதும் இருந்தனர். உடனே அவர் கோபமெல்லாம் பறந்தது. இன்னது செய்வதென்றறியாமல் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றார். பஞ்சணை மீது படுத்திருந்த பாவையை மட்டும் கவனித்தார்.

நிற்க, புஷ்பநாதர் இரண்டாமுறை எடுத்த கடிதத்தில் எழுதியிருந்ததாவது. "ஸ்ரீ ஜெகத்குருவும், மகாப் பிரபுவுமாகிய தேப்பிரம்பூர் மடாதிபதி யவர்களுக்கு அடியேன் பரமானந்த சாது கோடி நமஸ்காரம். தங்களாக்கினைப்படி இன்று அழகிற் சிறந்த ஆதீன மழகியை இரவு ஒரு மணிக்கு தங்களிருப்பிடம் கொண்டு வந்தோம். சுரங்கத்திற்கும், பாதாள கிடங்கிற்கும் நடுவிலுள்ள அறையில் வைத்திருக்கிறோம். அவள் புருஷனிடம் அவள் யாருடனோ ஓடி விட்டாளென்று கதை சொல்லி ஒரு முயற்சியும் எடுக்காமல் தடுக்கும்படி மோகதேசிக சாதுக்களை அனுப்பிவிட்டோம். தேப்பிரம்பூர் அழகி இனி ஆயுள்வரை தங்கள் ஆதீனம். தங்கள் பரிபூரண கடாக்ஷத்தையும் ஆசிரையும் இறைஞ்சும் பரமானந்த சாது." இக்கடிதத்தால் புஷ்பநாதர் தான் கண்டமங்கை ஆதீன மழகியாய்த் தானிருக்கவேண்டு மென்று யூகித்துக் கொண்டார். அவள் பலாத்காரமாய் அங்கு கொண்டு வரப்பட்டாளென்றும், அவளை எவ்விதத்திலும் காப்பதென்றும் உறுதிகொண்டார்.

மடாதிபதி மஞ்சத்தின் மேல் மங்கை நல்லாள் சயனித்திருப்பதை கண்டவுடன் அவள் தன் மனோ பீஷ்டத்தை நிறைவேற்ற யாதொரு ஆக்ஷேபணையும் செய்யாளென்று மனப்பால் குடித்து 'கண்ணே! ஆதீனு, எழுந்திரு" என்று சொல்லி மஞ்சத்தின் மேல் அமர்ந்து அவள் மேல் தன் கரங்களை வைத்தார். அதே நிமிடத்தில் அவர் பிடரியில் இடிபோல் ஒரு அடியுடன், குத்தும்

கலந்து விழுந்தது. மடாதிபதியைக் கீழேதள்ளி காலால் மிதித்து கொரவளையை நெறித்துக் கொண்டார் புஷ்பநாதர். ஆதினமழகி பக்கத்தறையிலிருந்த கயிறைக்கொண்டு வந்து அவரை இறுகக் கட்டினாள். உடனே புஷ்பநாதர் அம்மாதையும் பக்கத்தறையில் சிறை வைக்கப்பட்டிருந்த லீலாவதியையும் இன்னும் இரண்டு மாதரையும் அழைத்துச் சென்றார். வழியில் துன்மார்க்கருக்கு உதவியான உத்தியோகஸ் தனைக்கண்டார். அவனும் இவர்கள் பாதங்களில் விழ்ந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். லீலா சிங்கர் கரங்களுக்கு ஈயக்காப்பு பூட்டி லெக்ஷ ரூபாய் கட்டிடத்தில் தன் சாகாக்களுடன் அடைக்கப்பட்டார். மாதர்கள் தங்கள் கணவன்மார்களைச் சேர்ந்தனர். லீலாசங்கர் தற்கொலை செய்து கொண்டிறந்தார். புஷ்பநாதர் கடவுளைத்துதித்து நன்மையே புரிந்து வாழ்ந்தார்.

மகாத்மா திருவிளையாடல்கள்.

மஹாத்மா பம்பாயிலிருந்து லண்டன் செல்ல ராஜ புதனம் கப்பலில் ஏறியபின் தம்மைப் புகைப்படம் எடுக்க இசைந்தாராம்.

கப்பல் நடுக்கடலில் செல்லும்போது கப்பலின் மேல் தட்டில் மகாத்மா படுத்திருந்தது மகாவிஷ்ணு பால்கடலில் ஆலிலைமேல் துயிலும்வண்ண மிருந்ததாம்.

கப்பல் மாலுமி மஹாத்மாவை அழைத்து தனது இடத்தில் சற்றுநேரம் இருக்கும்படி வேண்டினபோது அடிகள்வேடிக்கையாக கண்ணைச் சிமிட்டிக்கொண்டே இன்னும் இரண்டுவாரம் உங்கள் ஜெயிலில்தானே இருக்க வேண்டும் என்றாராம்.

மஹாத்மா சிறிதுநேரம் கப்பலை ஓட்டினாராம்.

ஏடனில் வியாபாரிகள் 365 பவுன் பணமுடிப்பு தந்த போது ஏடன் வியாபாரிகளிடம் இதைவிட அதிகமான பணம் எதிர்பார்த்திருந்தேன் என்றாராம்.

கப்பல் காப்டன் வளர்க்கும் பூனைக்கு மஹாத்மா அன்புடன் ஆட்டுப்பால் முதலியன தந்தாராம். அப்பூனையும் மஹாத்மாவின் பக்கத்திலேயே படுத்திருந்ததாம்.

பேதமற்ற போதம்.

(தென்ஆப்பிரிக்கா, டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர்
திரு. ச. முனிஸ்வாமிப் பிள்ளை அவர்கள் எழுதியது.)

ஆண்களுக்கே கல்விநலம் வேண்டுமென்றும்
அடுப்பூதும் பெண்களுக்கேன் கல்வியென்ற
வீண்மொழிக ளாற்புத்தி மயங்கி யீன்ற
மெல்லியரை மடமைகொள வளர்க்கொண்ணாது
காணுகின்ற வில்லறத்தி னெறியினின்று
கணவனருஞ் சொற்கடங்கிக் கற்பு குன்றா
மாண்புடைய வழிகாட்டுங் கலையை நந்தம்
மாதர் கட்கிங் கோரளவு பயிற்றல் நன்றே. 1.

அருநிதியைக் காத்தவளாய்ச் செலவு செய்ய
அடுத்துவரு மாதுலருக் கன்புசெய்ய
வருவிருந்தை யுபசரிக்க மக்கட் பேண
மணவாள னுக்கிதமாம் புத்திசொல்லத்
தருமமொடு கடவுளரும் பத்தியோங்கத்
தங்களரும் பெண்களுக்குக் கல்வி யூட்டல்
பெருமைபெறப் பெற்றெடுத்தோர் கடமையென்றும்
பேசுகின்ற பேதமற்ற போதமாமே. 2.

விலையற்ற பொன்முத்து ரத்தினத்தால்
வேலைமிகத் தீர்ந்தகுழை தோட்டினோடு
கலைபெற்ற ஜடை பில்லைத் திருகுமேலாம்
தாளவட முஹார்மாலை கொலுசுகாப்பு
கலைபட்டுப் பொட்டுடனூ புரமுந்தண்டை
காரிகையார்க் கெஞ்ஞான்று மழகாகாது
நிலைபெற்ற கல்வியொன்றே மாதருக்கு
நீணிலத்தி லழகாக நிலைக்குமம்மா. 3.

கற்றவளே துரைச்சி நல்ல கல்வியேதுங்
கல்லாதவள் மடையச் சாம்பிராணி
கற்றவளே கண்ணுடைய நங்கையாகும்
கல்லாதாள் கண்ணற்ற மங்கையாகும்
கற்றவளே கன நிதிசே ரம்மையாகும்
கல்லாதா ளாட்டு மரப் பொம்மையாகும்.
கற்றவளைப் பெற்ருரே கனம் பெற்ருராம்
கல்லாமை வஞ்சியர்கட் கிழிவா கும்மே. 4.

உயர்ந்தவேலை! குறைந்த கூலி!!

எங்கள் அச்சுக்கூடத்தில் உயர்ந்த கலர் வேலைகள் மிகத் திறமையாகக் குறித்தகாலத்தில் செய்துதர புதிய ஏற்பாடுகள் பல செய்துள்ளதோடு புதிய அச்செழுத்துக்களும் வரவழைத்துள்ளோம். எந்த வேலையையும் குறித்தகாலத்தில் குறைந்த கூலியில் செய்துதருவோம். ஒவ்வோர் அன்பர்களும் ஓர் முறை தங்கள் வேலைகளைக் கொடுத்துப் பரீக்ஷிக்க வேண்டுகிறோம். புத்தக வேலைகள் சென்னை ரேட்டிற்கே செய்துதரப்படும்.

மானேஜர்

வேதாம்பாள் அச்சுக்கூடம்,

பள்ளத்தூர்.

கல்வி முறை.

வடிவேலன் வரைவது.

நவீனக் கல்வி முறையின் சீர்கேடான நிலைமையைத் திருத்த பல அறிவாளர் முன்னின்று உழைத்துவருகிறார்கள். தற்காலம் கல்விமுறையில் உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் நெருங்கிப் பழகவேண்டிய ஸாதனங்கள் கிடையாது. தவிர ஒழுக்கங்கள் விருத்தியாவதற்கும் உற்ற மார்க்கமில்லை. சில பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் கல்விச்சாலையில் வாசிப்பதைக் காட்டிலும், வீட்டிலேயே கல்வி கற்றுக்கொள்ளுவது மேன்மையானதென உணருகிறார்கள். இதற்குக் காரணம் கல்விச்சாலைகளிலிருக்கும் பலவிதமான ஸூழல்களே. பொதுவாக மாணவர்களுக்கு, அவரவர்கள் உபாத்தியாயர்களைப் போன்ற பழக்கவழக்கமுடையவர்களாயிருக்க வேண்டுமென்ற அவா அதிகம். ஆனால் தற்காலமிருக்கும் ஸ்திதியோ, உபாத்தியாயர்கள் புஸ்தகப் படிப்பை மாத்திரம் மாணவர்களிடை புகுத்துவதைத் தவிர தங்கள் நல்லொழுக்கம் அவர்கள் பால் தானாகவே சிறிது சிறிதாக ஊன்றும்படி செய்வதில்லை. இதற்குக் காரணம் பலவுள. முதலாவதாக உபாத்தியாயர்களுடைய ஸ்வதந்திரம் அபகரிக்கப்பட்டுவிடுகிறது. அவர்கள் பலர்களுக்கு அடிமைகளாயிருக்கும்படி நேரிடுகிறது. முதலாவதாக தலைமை உபாத்தியாயர், கலாசாலைக்கு பொறுப்புற்ற சிலர்கள், இன்ஸ்பெக்டர் முதலியவர்களை ஸந்தோஷப் படுத்தவேண்டும். இன்ஸ்பெக்டர், உபாத்தியாயர்களைப் பரீக்ஷிக்கவருகிறார்களென எண்ணவேண்டியிருக்கிறதே யொழிய மாணவர்களைப் பரீக்ஷிப்பதற்காகவென்று நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. உபாத்தியாயர்களுக்கு, இவர்களுடைய ஸந்தோஷத்திற்குப் பாத்திரமாகவேண்டுமேயென்ற ஏக்கத்தாலும், குடும்பக் கவலை, குறைந்த சம்பளம் முதலிய சிரமங்களாலும் மாணவர்களுடன் ஸந்தோஷ முகத்துடனும், களங்கமற்ற மனதுடனும், பொழுதுபோக்க ஸமயம் வாய்க்கிறதில்லை. மாணவர்களுக்கும்

புத்தகப் படிப்பைத் தவிர உபாத்தியாயரிடமிருக்கும் நற்பழக்கங்களைப் பிரத்தியக்ஷமாகக் கண்ணுற்று அனுஷ்டிக்கவும் முடிகிறதில்லை. ஏனெனில் ஒரு தினத்திற்குள் அவர்கள் அநேக உபாத்தியாயர்களின் கீழ் வயப்படவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உபாத்தியாயரிடமும் அரைமணி பழகினால் அது எம்மாத்திரம் பலனிருக்குமோ தெரியவில்லை! உபாத்தியாயத்தொழில் தேசத்திற்கே சிறந்ததொண்டாகும். உபாத்தியாயர்கள் மாணவர்களுடைய க்ஷேமத்தையும், முன்னேற்றத்தையும் இடைவிடாது மனத்தில்கொண்டு நிற்கவேண்டும். தாங்கள் மாணவர்கள்பால் காட்டும் அளவற்ற அன்பினால் எப்போதும் அவர்கள், தங்களது (உபாத்தியாயர்களது) சிநேகத்தை நாடும்படி செய்யவேண்டும். 'நல்லொழுக்க போதனை' என்ற விஷயத்தைப் பிரத்தியேகமாக மாணவர்களுக்குப் போதிப்பதைவிட தங்களுடைய நற்பழக்கத்தை மாணவர்கள் தாங்களாகவே அனுஷ்டிக்குமாறு செய்தல் அழிவிலா பிரயோஜனத்தைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் உபாத்தியாயர்கள் நல்லொழுக்கமுடையராய் விளங்குவதற்கு அவர்களை நல்லொழுக்க முறையில் பழக்குவதற்குற்ற ஆலயமும் வேண்டும். இந்திய மாணவர்களுக்கு இந்திய நடையுடை பாவனைகளை யொட்டி கல்விகற்றுக்கொடுக்க வேண்டுமே யொழிய பிறநாட்டிலிருக்கும் பழக்க வழக்கங்களை ஸ்வீகாரம் செய்துகொள்ளுவது மிகக் கேட்டை விளைவிக்கும்.

உபாத்தியாயர்கள் கேவலம் வயிறுவளர்ப்பதற்காக அத்தொழிலைக் கைக்கொண்டிருக்கிறோமென்று நினைக்கக்கூடாது. அவர்களுக்கு சுயநலமும் கூடாது. தாங்கள் தேசமுற்னேற்றத்திற்கு இன்றியமையாத கருவிகளென அவர்கள் உணரவேண்டும. பிறருடைய நகைப்பையும், ஸ்தோத்திரத்தையும், அவர்கள் சிறிதும் லக்ஷியம் செய்யாது தங்களுடைய உத்தமமான கடமையை மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி செலுத்துதல்வேண்டும். இவ்விதத் தூய்மையான குணங்களே உபாத்தியாயருக்கு இன்றியமையாதவைகள். இவ்வித குணங்களின்றி மாணவர்களுக்கு உபதேசிக்க வருபவர்கள் தேசத்துரோகிகளென சந்தேஹமின்றிக் கூறலாம்.

மேல்வகுப்பைக் காட்டிலும் கீழ் வகுப்புக்களுக்குப் போதிப்பதே மிகவும் கடினமென்று யாவரும் அறிவார்கள். ஆனால், தற்காலம் சென்னை ராஜதானியில் கீழ் வகுப்பு உபாத்தியாயர்களுக்கு 20 அல்லது 25 ரூபாய்க்குமேல் சம்பளம் கொடுக்கிற வழக்கமில்லை. இக் குறைந்த சம்பளத்தினால் அவர்கள் தங்கள் குடும்பங்களை ரக்ஷிக்கமுடிகிறதில்லை. அதனால் கடன்வாய்ப்பட்டு கவலைக்குள்ளாகி உத்ஸாகத்தை இழந்துவிடுகின்றனர். இவ்வித கவலைகளுககு அவர்களை ஆளாக்காமல் காப்பாற்றினாலல்லவா அவர்களுக்கு உத்ஸாஹம் உண்டாகி மாணவர்களுக்கும் நன்கு போதிப்பதற்கு மனமிடங் கொடுக்கும்.

என்னுடைய அனுபவத்தில், தலைமை உபாத்தியாயர் பதவியை வகிக்கும் சிலர்கள் தங்கள் கீழிருக்கும் உபாத்தியாயர்களை வேலைக்காரர்களுக்கு ஸமமாய் நடத்துவதும் தென்பட்டிருக்கிறது. தாங்கள் 200 அல்லது 250 ரூபாய், வாங்கிக்கொண்டு ஆரம்பக் கல்வி கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கு 20 ரூபாய் போதுமென்று சிபார்சுசெய்கிற பிரமுகர்களு மிருக்கிறார்கள். கல்விச்சாலையில் பழகிப் பொறுப்புற்ற ஸ்தானங்களை வகிக்கும் இன்னவர்களே கீழ்வகுப்பு உபாத்தியாயர்களின் ஸௌகரியத்தை கவனிக்காதுபோனால் என்னப் பிரயோஜனம்? இளங் குழந்தைகளுடைய உடம்பு ஸௌகரியா ஸௌகரியத்திற்கு எவ்விதம் தாயார்காரணமோ, அவ்விதமே மாணவர்களுடைய நல்லொழுக்கத்திற்கும் உபாத்தியாயர்களுடைய உத்ஸாஹமும் தன்மையுமே காரணம். உபாத்தியாயர்கள் உத்ஸாஹத்துடனிருக்கும்படி செய்ய வேண்டுமானால் அவர்களுடைய வயிற்றுக் கஞ்சிக்காவது பூரணமாகக் கொடுக்கவேண்டும். அக்காலந்தான் அவர்களுக்கும் உத்ஸாஹம் உண்டாகும். மாணவர்களும் பலன் பெறுவார்கள்.

"அருளாவது, ஒன்றின் துயர்
கண்டாற் காரணமின்றித்
தோன்று மிரக்கம்."

கடவுளும்—காந்தியடிகளும்.

[அக்டோபர்-மீ 17-ௗ காலை (லண்டன் கிங்ஸ்லி ஹாலில் கோலம்பியாக் கம்பேனியார் கிராமபோன் பிளேட் தயாரிக்க என மகாத்மா காந்தியடிகள் செய்த ஆங்கிலமொழிப் பிரசங்கத்தின் சரியான மொழிபெயர்ப்பு.]

இன்னதென்று வகுத்துரைக்க மாட்டாத விந்தை வாய்ந்த தாய், எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்ற சக்தியொன்று உளது. அதனை யான் காணவிடினும் உணர்கின்றேன். இந்தக் காணாத சக்தியானது ரூபிக்கப்பட முடியாவிடினும், தான் இருக்கின்ற தென்பதைத் தெற்றெனத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. நான் என்னுடைய பொறிகளால் காண்கின்றவைகளுக் கெல்லாம் அடியோடு மாறாக இருப்பதாற்றான் அச்சக்தியை ரூபிக்க முடிவதில்லை. புலன்களைக் கடந்தது அது. ஆயினும், கடவுள் இருக்கின்றார் என்பதற்கு ஓரளவு காரணம் காட்டுவது கூடும் எனவும் நினைக்கின்றேன்.

சாதாரணமாய் ஜனங்கள் தங்கள் அரசன் யாரென்றேனும், அல்லது அவன் என் ஆள்கின்றான் என்றேனும், எப்படி ஆள்கின்றானென்றேனும், தெரிந்துகொள்ளாமல் இருக்கிறார்களென்பதை நாம் அறிவோம். ஆனால், நிச்சயமாய் ஆள்கின்ற சக்தியொன்றுள தென்பதைப் பற்றி யாதும் அவர்களுக்குச் சந்தேகமில்லை. சென்ற ஆண்டு நான் மைசூர் ராஜ்யத்தில் யாத்திரை செய்தபொழுது நான் சந்தித்த எளிய கிராமவாசிகள் பலருக்கு மைசூரை ஆள்கின்றவர் எவரென்று தெரியவில்லை என்பது, அவர்களோடு வார்த்தையாடுங்கால் எனக்குத் தெரியவந்தது. 'ஏதோ ஒரு கடவுள் மைசூரை ஆள்கின்றது' என்றே அவர்கள் கூறினர். தங்கள் அரசனைப் பற்றி அவ்வேழைமக்களுக்கு இருந்த அறிவு அவ்வளவு சிறியதெனின் நான், அரசருக்கெல்லாம் அரசராய கடவுளின் இருக்கையைக் கருத்தில் கொள்ளக் கூடாதிருப்பது விந்தையாமோ! அரசனுக்கு அவர்கள் எத்தனை

சிறியவர்களோ அதனில் அதிகமும் யான் கடவுளுக்குச் சிறியனல்லனோ!

எனினும், மைசூரைப்பற்றி அக்கிராமவாசிகள் உணர்ந்தவாறே நானும் இப்பிரபஞ்சத்தில் ஓர் நியதியும், நிகிலப் பொருள்கள் அனைத்தையும் ஆள்கின்றவோர் விலக்கரிய விதியும் உளவென்று உணர்கின்றேன். அதுவும் குருட்டு விதியன்று. உயிரின் தொடர்புடைய ஒழுக்கத்தினைக் குருட்டுவிதி யொருபோதும் ஆளமுடியாது. ஜடப்பொருள்களுககும் உயிருண்டென்று நிரூபித்த ஸர். ஜெ. ஸி. போஸ் அவர்களின் ஆராய்ச்சிக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டவர்களாதல் வேண்டும்.

எனினும், எல்லா உயிர்களையும் ஆள்கின்ற விதியே கடவுள். விதியும் அவ்விதியை விதிக்கின்றவனும் ஒன்றே. அவ்விதியைப் பற்றியேனும் விதிப்போனைப் பற்றியேனும் யானறிந்தது மிகச் சிறியதென்ற காரணத்தால் யான் அவ்விதியையாகிலும் விதிப் பலனையாகிலும் மறுத்த லாகாது. இங்கு இவ்வுலகத்தில் ஓர் அதிகாரத்தை யாம் அறியாதிருப்பதும் மறுப்பதும் எப்பயன் எய்துவிக்கும்? அப்படியே கடவுளையும் அவர் விதியையும் மறுப்பதால் அவ்வாட்சியினின்று நான் விடுபட்டவனாகமாட்டேன். இவ்வுலகிற்குரிய அதிகாரத்திற்கு ஒவ்வி ஆளாவது வாழ்க்கையைச் சுலபமாக்குவது போலவே, கடவுளினது அதிகாரத்திற்குத் தாழ்மையுடன் வாய்பேசாது அங்கிநிற்றல் உயிரின் பயணத்தைச் சுலபமாக்கும்.

என்னைச் சுற்றியிருக்கின்ற எல்லாம் எக்காலும் மாய்வனவாகியும் மாறுவனவாகியும் இருக்கின்றன வெனினும், அம்மாறுபாடுகளுக்கெல்லாம் அடிப்படையாய், ஒருபோதும் மாறாததொரு சாச்வத சக்தி, சிருஷ்டிப்பதுமாய் இருப்பதை நாம் ஒருவாறு காண்கின்றோம். அச்சக்திதான் கடவுள், யான் என் புலன்களால் காண்பனவற்றுள் மாயாது மாறாது நிலைநிற்பதொன்றும் இல்லை. அப்புலன்களுக் கெட்டாக் கடவுள் ஒருவரே யிருக்கின்றார்.

இப்படியெல்லாவற்றையும் ஆள்கின்ற அச்சக்திதான் தயையுடையதோ என்னின், களங்கமற்ற தயை மிக உடையதாகவே

எனக்குத் தோன்றுகின்றது. ஏனெனில், மரணத்திற்கிடையே மெய்ம்மையும், இருளுக்கிடையே ஒளியும் உலவாது நிலைநிற்கக் காணவல்லேன். ஆதலின், கடவுள் உயிராயும் மெய்ம்மையாயும் ஒளியாயும் இருக்கின்றாரெனக் கொள்கின்றேன். அவரே அன்பு; அவரே யாதினும் மேதக்க நன்மை.

கடவுள் நம் புத்திக்குத் திருப்தியளிப்பதென்பது ஒருபோது மில்லை. அப்படி, புத்திக்கு மட்டும் பொருந்தி அமைகின்ற கடவுள் கடவுளாகமாட்டார். கடவுள் கடவுளாயிருப்பதற்கு நமது இதாயத்தை ஆட்கொண்டு அதனை மாற்றிவைக்கவேண்டும். தன் பக்தனது மிகச்சிறிய செய்கைகளிலும் அவர் தன்னைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். ஐம்புலன்களால் விளையவல்லதைவிட உண்மையாய ஓர் நிச்சய அநுபவத்தினல் தான் இது இயல்வதாகும். பொறிகளின் அறிவு எவ்வளவு உண்மைபோற்றோன்றினும் பெரும்பாலும் மயக்கமுடைய பொய்யாகி முடிகின்றது. ஆதலின், புலனறிவிற்கு அப்பாலாகிய உணர்ச்சியே உண்மையாகும். புறச்சான்றுகளால் நிரூபிக்கப்படாது. கடவுளின் இருப்பைத் தம்முள்ளே தேரியவர் தம் குணமும் ஒழுக்கமும் மாறிய பான்மையே கடவுளை நிரூபித்ததாகும். தேயந்தோறுங் காலந்தோறும் ஆங்காங்கு இடையறாது தொடர்ந்து நிகழ்ந்த தீர்க்கதரிசிகள் முனிவர்கள், முதலியோர் வாழ்க்கை வரலாறுகளே இதற்கு நல்ல சான்றுகளாய் நிலைநிற்கின்றன. இதனை மறப்பது தன்னையே மறுத்துக்கொள்வதை ஒக்கும்.

இந்த ஆன்மாநுபம் வருதற்குமுன் பிறந்துவளர்வது அசையாத நம்பிக்கை. கடவுளின் இருக்கையை அழியாத நம்பிக்கையால் ஒவ்வொருவனும் தன்னளவிலேயே சோதித்துக்கொள்ளலாம். இந்நம்பிக்கையைத் தானும் புறச்சான்றுகளால் நிரூபிக்க இயலாது.

ஆகையால், உலகத்தின் தரும ஆட்சியினும், மெய்ம்மையும் அன்புமாய அத்தருமவிதிகளின் மேன்மைச் சிறப்பினும் நம்பிக்கை வைப்பதே தக்க நெறியாகும். மெய்ம்மைக்கும் அன்பிற்கும் மாறுயவைகளை யெல்லாம் சிறிதுந் தாழாது தள்ளிவிடக்

கூடிய இடங்களில் இந் நம்பிக்கையைக் கையாள்வது சாலச் சிறந்தது.

அறிவு ஆராய்ச்சிகளின் வழியாய்க் கடவுளைச் சாதிக்கவல்ல காரணமொன்றும் யானறியேன். பகுத்தறிவையுங் கடந்து நிற்பது நம்பிக்கை. ஆதலின், இயலாததற்கு முயலவேண்டா. உலகத்தில் தீமைகளிருப்பதற்குத் தக்க காரணம் காட்ட என்னாலியலாது. அது இயல்வதென்றால் கடவுளிற்கே நான் நிகராய பரிசாகும். ஆதலின், தீமை யிருக்கின்றதென்பதை மட்டும் நான் தாழ்மையுடன் தெரிந்துகொள்கின்றேன். அன்றியும், இத்தீமையை உலகில் இருக்கும்படி விடுவதால்தான் கடவுளை நான் பெருந்துயர் தாங்கிய பொறுமையை யுடையவரென் றழைக்கின்றேன். அவரிடத்தில் யாதுந் தீமையில்லை; எனினும், தீமையைச் சிருஷ்டித்தவர் அவரே; மற்றும் தீமையால் அவரோ தீண்டப்பட்டவரல்லர்.

உயிரே போவதெனினும், இத்தீமையுடன் இகலிப் பொருது தொலைக்க முயலேனெனின் நான் கடவுளைத் தெரிந்துகொள்ள இயலாதென்பதை யறிவேன். என்னுடைய மிகச்சிறு அநுபவம் இந்நம்பிக்கைக்கு ஆதாரமாகின்றது. நான் தூய்மையாகவாகக் கடவுளை நெருங்கி நெருங்கி யடைகின்ற உணர்ச்சி யுடையவனாகின்றேன். இப்பொழுது ஒப்புக்கு ஏதோ இருப்பதுபோலல்லாமல் என் நம்பிக்கை இமயமால் வரையன்ன நிலைபேறுடையதாய், அதன் சிகரத்துப் பனியைப்போல் வெண்மையாய் அமையுமெனின், அவருக்கு இன்னும் நான் எத்துணை அண்மியனாவேன்.

[க—நி.]

'இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாயெறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே.

—திருநாவுக்கரசர்.

பொன் மொழி.

"பனையளவு பேசுவதைவிடத் தினையளவு காரியத்தில் செய்து காட்டுவதே சிலாக்கியம்." "பெரிய பெரிய நற்செய்கைகளை செய்யவேண்டுமென்று பலர். சொல்லுவது இயற்கையே. ஆனால் ஒரு சிறிய நற்செய்கை மகாபெரிய நல்லெண்ணத்தைவிட மிகவும் சிறந்தது"

"ஒருவர் செய்த நன்மைகுன்றின் மேலிட்ட விளக்கு போல் பிரகாசிக்கும்"

"இதரர்களுடைய நன்மைக்குப் பாடுபடுவதில் தான் தனக்கு நன்மை இருக்கிறதென்பதை யாவரும் உணரவேண்டும். மக்களனைவர்களும் இந்நோக்கத்துடன் வேலைசெய்வற்குத் தான் சகோதரத்வம் எனப்படும்."

"நல்ல கருத்துகளை செய்கையில் செய்து காண்பிப்பதே நற்காரியங்களெனப்படும்."

"மனிதனது வாழ்க்கைக்காலம் குறுகியதுதான். ஆனால் அக்காலத்தை வீணாக்குவது தக்க சமாதானமாகாது."

"நமக்குள்ள பலம் எளியவர்களை காப்பதற்கே யொழிய எளியவர்களை வீழ்த்துவதற்கல்ல."

"பொறுமையுடன் இருக்க முயலுவதே வெற்றியின் இரகசியமாகும்."

"நாம் எப்பொழுதும் பூரணநம்பிக்கையுடன் இருக்கவேண்டும். நாம் நம்மிடத்தும் பிறரிடத்துமுற்றநற்குணங்களினும் சந்தேகம் கொள்ளுதலாகாது"

"ஏமாறுகிறவர்கள் இல்லையானால், ஏமாற்றுகிறவர்கள் இல்லை. ஓடாமல் ஓரிடத் திருப்பவர்களை ஒடித் துரத்துபவர்கள் இல்லை. மூடநம்பிக்கைகளில் மூழ்குபவர்கள் இல்லையானால், மூடநம்பிககையைப் புகுத்த முன்வருவார் யாருமிரார். அறியாமையைப் போற்றி அடிபணிந்து வணங்குபவர் இல்லையானால், அறியாமைப் பேய் தலைவிரித்தாட இடமில்லை." (தமிழரசு.)

விகடத் துணுக்குகள்.

ஓட்டர்:— ஐயா சட்டசபை அங்கத்தவரே! நாங்கள் உங்களுக்கு ஓட்டுச்செய்து தேர்ந்தெடுத்ததற்காக என்ன காரியஞ் செய்தீர்?

மெம்பர்:— எனக்கிருந்த வருமான வரியை நீக்கிக்கொண்டேன்.

ஃ ஃ ஃ

ராமன்:— சோமா! கடன்பட்டு வீடுகெட்டுகிறுயே, கடன்காரர்வந்து வீட்டைக் கைப்பற்றிக்கொண்டால் என்செய்வாய்?

சோமன்:— நான் என்னய்யா மடையனு? வீடும் வீடுகட்டும் நிலமும் என்மனைவியின் பெயரில் கிரயம் வாங்கியிருக்கிறேன். எனக்கா ஒருவர் புத்திசொல்ல வைப்பேன்?

ஃ ஃ ஃ

கந்தன்:— நான் தற்காலம் குமஸ்தாவேலைபார்க்கிறேன். சம்பளந்தவிர வேறு வருமானமில்லை கஷ்டமாயிருக்கிறது. என்ன செய்யலாம்?

கந்தன்:— அப்படியானுல் இன்னுஞ் சம்பளங்குறைவாகவிருந்தாலும் எங்கேனும் ரயில்வே டிக்கெட் கலெக்டர் வேலையில் அமர்ந்துவிடு.

ஃ ஃ ஃ

தந்திரக்காரர்:— ஓய் மந்திரக்காரரே! ஊரில் எல்லாருக்கும் பிள்ளைபிறக்க மந்திரஞ்செய்கிறீர்களே உமக்கு என் பிள்ளை இல்லை? அதற்கு மந்திரமில்லையோ?

மந்திரக்காரர்:— மாதா பிதாக்கள் செய்யும் நன்மை தீமைகள் மக்களையுஞ் சேரும். ஆனதால் நான் செய்யும் இப்படிமோசங்களின் பலன் எனது பிள்ளையையுஞ் சேருமென் றெண்ணி எனக்

குப் பிள்ளை பிறவாதிருக்க மந்திரஞ்செய்து கொண்டேன்.

தந்திரக்காரர்:— பேஷ் நீர் பெரும் உத்தமர் தான்.

ஃ ஃ ஃ

வீரன்:— யூனியன். யூனியனென்று சொல்லுகிறார்களே. அதனால் பிரயோஜனமுண்டா?

சூரன்:— உண்டு ஆனால் மோட்டார்பஸ் யூனியனால் பிரயாணிகட்குப் பெரிய துன்பமுண்டு. அதைமட்டும் நம்பக்கூடாது.

ஃ ஃ ஃ

துருவன்:— ஐயா! தந்திமாஸ்டரே! சென்னைக்கு ரூபாய் அனுப்பவேண்டும் அது எப்பொழுது அவர்களுக்குக்கிடைக்கும்?

தந்திமாஸ்டர்:— ஒருமணிநேரத்தில் கிடைக்கும்.

துருவன்:— சரி அவர்கள் சாமான்வாங்கி உடனே அனுப்பினால் எப்பொழுது கிடைக்கும்?

தந்திமாஸ்டர்:— நாளை மாலை கிடைக்கும்.

துருவன்:— என்னசார் விளங்காமல் பேசுகிறீர். நான் ரூபாயனுப்பினால் ஒருமணியில் கிடைக்கும். அவன் அனுப்பும் சாமான் மட்டும் நாளைத்தான் கிடைக்குமாம். அப்படியானால் நான் வேறு ஆபீஸிற்குப்போகிறேன்.

ஃ ஃ ஃ

சொந்தக்காரர்:— ஓய் மானேஜரே! நமது தொழிற்சாலையில் எப்பொழுதுபார்த்தாலும் நோங்கழித்துவருவதும் சீக்கிரம் போய்விடுவதுமாக இருக்கிறார்களே அதற்கென்ன செய்யலாம்.

மானேஜர்:— நமது மேஸ்திரிக்குப் பதில் ஓர் அழகிய இளம் பெண்ணை மேஸ்திரியாக நியமித்துவிட்டால் அக்குறை நீங்கிவிடும்.

ஃ ஃ ஃ

சுயமரியாதைக்காரன்:— ஓய் நாயுடு நீர் தினம் பிராம்மணர் கிளப்பிற்கே சாப்பிடப்போகிறீரே, அது என்?

நாயுடு:— பிராம்மணரல்லாதார் கிளப்பு சமையல்காரர்கள் செய்யும் ஆபாசங்கள் பார்த்துச் சகிக்கமுடியவில்லை பிராம்மணர் கள் கிளப்பிலோ கண்மறைவாய் நடப்பதால் அவ்வாபாசங்கள் பிராம்மணரல்லாதாரின் கண்ணுக்குப் புலப்படாததால்.

சீர்திருத்தவாதி:— ஒய் வைதிகரே! கோவிலில் சாமிக்குத் தாசிவேண்டிய தவசியமா?

வைதீகர்:— சாமியை நடத்தும் ஆசாமிக்காக வேண்டித் தான். அது இல்லையேல் அவர்கள் கோவிலையே எட்டிப்பார்க்க மாட்டார்கள்

ஃ ஃ ஃ

பெரியபையன்:— அடீ! சின்னக்குட்டி! எங்கேயடி போனுய்.

சின்னக்குட்டி:— அடே! பெரியபயலே! என்னடா அடி என்கிருய் மூஞ்சைப்பாரு போக்கிரிப்பயலே.

ஃ ஃ ஃ

சுந்தரம்:— அடீ! மோகனம்! ஐயோ இதற்கென்னடி செய் வது என் கணவர் மதுபானம் அபரிமிதமாக் குடித்துவந்தார் வைத்தியரிடம் மருந்துவாங்கிக்கொடுத்தேன்.

மோகனம்:— ஆமாம் இப்பொழுது குணம்தானே?

சுந்தரம்:— போறும் நல்லவேலை செய்தேனடி. மருந்தைக் காப்பியில்கலந்துக்கொடுத்து.முதல்அவர் காப்பியே குடிப்பதில்லை.

ஃ ஃ ஃ

தாசி:— ஆமாம் நீங்கள் மதராஸுக்குப் போயிருந்தீர்களா மே? போகும்பொழுது எங்களிடம் சொல்லிவிட்டுப் போகக் கூடாதா. நாங்கள் எதுவும் வாங்கிவரச் சொல்வோ மென்றுயிப் படிச் செய்தீர்கள்.

மைனர்:— இல்லை சொல்லக்கூடாதென்பதல்ல. மிகவும் அவசரமான காரியம் ஆகவே போய்விட்டேன். நான்தான் மதரா ஸிலிருந்து எதுவும் வேண்டியிருந்தால் எழுதும்படிக்குக் கடிதம் போட்டேனே!

தாசி:— உங்கள் கடிதத்திற்கு உடனேபதில் போட்டோமே.

மை:— பதில் வருவதற்குள் இங்கு அவசரமாகவந்துவிட்டேன்? என்ன எழுதியிருந்தாய்.

தாசி:— ஒன்று மில்லை இப்படியும் நீங்கள் கற்றுக்கொண்டீர்கள் என்றுதான்.

கருப்பி:— என்னடி! சுப்பி! பேசமாட்டேன்கிறாயே உனக்குக் கலியானமாமே!

சுப்பி:— என்ன அக்கா! உங்களுக்கு வேறு ஜோலிகிடையாதா? சதா இந்தப் பேச்சுதானா?

கருப்பி:— இருக்கட்டும் பக்கத்துவீட்டு மாப்பிள்ளைக்கு நல்ல நடத்தை கிடையாது என்று உன்தாயார் சொன்னார்களே! இப்பொழுது மட்டும் எது சம்மதித்தது.

சு:— இல்லை அக்கா! இதுதெரியாதா பக்கத்துவீட்டு மாப்பிள்ளைக்கு மாமியார் என்ற கௌரவமிருந்தால் போதுமானது என் தாயாருக்கு.

ஃ ஃ ஃ

மைனர்:— உன்னை ஒருக்ஷணமும் மறக்கவே மாட்டேன். நீதான் என் உயிர்

தாசி:— வேண்டாம். காரியப்பேச்சுப் பேசாதீர்கள். வீணாக பொய்வார்த்தை எதற்கு.

மை:— என்ன அப்படிச் சொல்லிவிட்டாயே. என்மேல் உனக்கு நம்பிக்கையில்லைபோலும்.

த:— நம்பிக்கைதான் தீபாவளிக்கு சேலையும் ரூபாயும் அனுப்புகிறேனென்று சொல்லிப்போனவர்கள் இன்று தானே வந்தீர்கள்.

மை:— அப்படித்தான் அதில் எனக்கு மறதி அதிகம் உண்டு. ஆனால் உன்னைமட்டும் மறக்வேமாட்டேன்.

மதிப்புரை.

இராமயண வெண்பா.

[ஆசிரியர் கோட்டையூர் வித்வான். மீ. சுப்பிரமணிய்யரவர்கள். இதன் விலை குறிக்கப்படவில்லை யாயினும் ஐந்து ரூபாய்க்கு மேல் எவ்வளவு கொடுப்பினுந் தரும். கிடைக்கு மிடம் நூலாசிரியராகிய மீ. சுப்பையரவர்கள். வித்வான் கோட்டையூர் போஸ்ட்.]

இதன் பிரதி ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் முறையோடு செல்னல்குடி ஸ்ரீசாமிக்குட்டிராயர் அவர்களிடத்தும் அவர்கள் சகோதரர் ஸ்ரீவீமகவிய்யவர்களிடத்தும் கற்றுத் தெரிந்த வித்வானுகும். இவர் நீண்டநாளாக ஓர் ஆற்றல் வாய்ந்த கம்பராமாயணப் பிரசங்கியாருமாவர். இப்பெரியார் கம்பராமாயணத்தைத் தழுவி ஆறுகாண்டங்களையும் 9379 வெண்பாக்களாக நீண்ட பிரயாசையின் பேரிலும் ஒப்விலா உழைப்பினுலும் தனது முதிய பருவத்தில் ஆண்மையோடுபாடி முடித்துத் தனது பார்வையிலேயே உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 1370 பக்கங்கொண்ட பெரிய புத்தகமாக அச்சிட்டு நன்ருகப் பைண்ட்செய்து வைத்திருக்கின்ருர்கள். இவர்களின் செய்யுள் ஒவ்வொன்றிலும் நயமும் கம்பீரத் தோற்றமும் பெரும் ஆராய்ச்சியும் உண்மையும் பொதிந்து கிடக்கின்றது. இவ்வளவு பெரு நூலைச் செய்யுந் தமிழறிஞர்கள் இந்நாளில் குறைவாகையால் இவ்வித்வான்களை ஆதரிப்பதற் கனுகூலமாக அவர்கள் செய்துள்ள நூலைப் படித்துப் பயனடையவேண்டுவது ஒவ்வோர் தமிழரின் கடமையாகும். இதை ஆதரிப்பதன் மூலமே மீண்டும் அவர்கள் தமிழிற் குதவிசெய்ய நாம் தூண்டியவர்களாவோம். இப்பெரும்பணி சிறிதும் தடையின்றி முடியும்வரை ஆசிரியரவர்களுக்குப் பெரும் உதவிசெய்த கோட்டையூர் ஸ்ரீமான் க. வீ. அள. ராம. முத்தையா செட்டியாரவர்களின் குமாரரும் தனவணிக வள்ளலுமான இராமநாதன்

செட்டியாரவர்களின் உதவி பெரிதும் போற்றுதற்குரியதாகும். இவ்வாறு தமிழறிஞர்களை ஆதரிக்கும் வள்ளல் தன்மை பூண்டோர் நம்நாட்டில் அரிதாகலான் அதற்குக் கைம்மாறாக நமது ஆசிரியரவர்கள் அப்பெரியாரின் புகழை இந்த இராமயண வெண்பா மூலம் ஓங்கச் செய்திருப்பதுகண்டு சந்தோஷிக்கிறோம். தமிழுகத்திற்கு இப்பெரும் உதவிசெய்த ஆசிரியரவர்கட்கு நமது மனமுவந்த வணக்கத்துடன் கூடிய நன்றி என்றும் உரியதாகுக.

உடற்பயிற்சி (முதற்பாகம்.)

[ஆக்கியோன் சாண்டோ லெ. சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் கீழச்சிவல்பட்டி. இதன் விலை ரூபாய் 3. கிடைக்குமிடம் இதன் ஆசிரியவர்களிடமும் பள்ளத்தூர் 'நவமணி' பத்திரிகாலயத்தினு மாகும்.]

இதன் பிரதி ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். நீண்டநாளாக உடற்பயிற்சியின் உயர்வையும் அதன் அவசியத்தையும் பற்றிச் சதா நமக்குப் போதனைகள் செய்துகொண்டிருக்கும் ஆசிரியரவர்களின் இடைவிடா உழைப்பின் காரணத்தாலும் அவர்கள் முன் குறிப்பிட்டபடியும் இப்பயனுள்ள புத்தகத்தை நமக்குத் தந்துள்ளார்கள். இது உயர்ந்த ஆட்பேப்பரில் 112 பக்கங்கள் கொண்டதாயும் நன்றாக பைண்ட்செய்யப்பட்டதாயும் மேல்நாட்டு முறையைத் தழுவி வேறு உதவியில்லாமல் வெறுங் கையோடேயே செய்யக்கூடிய 30 அப்பியாசங்களின் விளக்கமும் அதைச் செய்கையில் காட்டக்கூடிய 48 படங்களும் கொண்ட பெரும் புத்தகமுமாகும். இதன் உதவி தமிழ்நாட்டவர்க்குப் பெரிதும் தேவையாகையால் தமிழர்கள் யாவரும் வாங்கிப் பலனடைய வேண்டுவதோடு இதன் வருவாய் மீண்டும் உடற்பயிற்சி வேலைக்கே பயன்படுத்தப் படுமென்பதையும் கேட்டு சந்தோஷங் கொள்ளுகிறோம். ஒவ்வோர் உடற்பயிற்சியாளரும் ஆசான் தேடுவது கஷ்டமாக நேரின் இதை ஓர் பெரும் ஆசான்போன்று பயன்படுத்திக்கொள்ளலாம். இப்பெரும்பணியில் பங்கெடுத்துக்கொண்டு பொருளுதவி செய்த கானாடுகாத்தான் ஸ்ரீமான் சா. ராம. சித.

ஜம்புலிங்கஞ் செட்டியாரவர்களின் செயலும் பெரிதும் போற்று தற் குரியதாகும்.

வீரபர்மீயர் விஜயம்.

[ஆசிரியர் சி. நாகையா அவர்கள் விலை ரூபாய் ஒன்று கிடைக்குமிடம் மானேஜர், நவீன கதாபுத்தகசாலை. இரங்கூன். வீர பர்மீயர் விஜயத்தின் பிரதி ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது பர்மாவைப்பற்றி நன்கு ஆராய்ந்தறிந்த ஆசிரியர் நாகையா அவர்களால் எழுதப்பட்ட பர்மீயச் சரித்திரமாதலால் இது பர்மா விஷயங்கள் அறியவேண்டியவர்களுக்கு ஓர் நல்ல சரித்திர சம்மந்தமான பொக்கிஷமாகும். இதில் பர்மீயர் வம்ச விளக்கம், விநாயகர் மகத்துவமும், பர்மீயர்கள் விநாயகரைக் கொண்டாடிய விதமும் பர்மாக் கோவில்களுக்கும் நமக்குமுள்ள பூர்வீக சம்மந்தம், பர்மாகோவில்கள் பற்றிய விபரங்கள், பர்மீய பண்டைய மன்னர்களின் சரிதங்கள், முதலியனவும் 8 ஆப்டோன் படங்களும் முக்கியமாக விளங்குகின்றன. இதை வெளியிட்ட நவீனகதா புத்தகசாலையார் தமிழுக்குவேண்டிய உதவிசெய்து பல தமிழ் சாஸனங்களை அச்சியேற்று விற்கின்றவர்கள் என்பதையும் ஞாபகமூட்டுகிறோம். எனவே தமிழர்கள் இப்புத்தகத்தையும் ஆதரித்து அவர்களுக்கு மேலும் மேலும் ஊக்கமளிக்கவேண்டுகிறோம்.

இப்புத்தகங்கள் வேண்டுமா?

எனது நெடுங்கனவு ரூ.	0—6—0
இரட்டைப் புலர் சரித்திரம்.	0—6—0
தமிழன்.	0—6—0
ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபதுபாடிய வரலாறு.	0—2—0
'நவமணி' முதலாவதாண்டு காலிகோபைண்ட்	1—8—0

மானேஜர்,

'நவமணி' பத்திரிகாலயம், பள்ளத்தூர்.

விசேஷச் செய்திகள்.

இந்தியாவிற்குப் பெரிய விமானம்.

லண்டன் டில்லி விமானத் தபால் போக்குவரத்தில் இந்தியாவிற்கும் எகிப்திற்கு மிடையில் தபால் கொண்டு செல்வதற்கு ஹார்சா என்ற 4 இஞ்சின்கள் மாட்டியராக்ஷச விமான மொன்று லண்டனிலிருந்து வந்துசேர்ந்திருக்கின்றது.

உடைச் சிக்கனம்.

மகாத்மா காந்தி உந்தியாவிற்கு உடைச்சிக்கனம் அவசியம் என்கிறார். உடையணிவதில் ஆடம் பரம் கூடாதென்று அபிப்பிராயப்படுகிறார். ஏழைமக்களுக்கு அன்னமளிப்பதும், சிக்கனத்தையும் ஆடம்பரமற்றவாழ்க்கையையும் உண்டுபண்ணுவது கதரின் தத்துவமாம். உலகமுழுவதும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக் காரணமாக பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான தாஹீதி என்ற தீவில் விவசாயக்கமிட்டியார் பொதுமக்களின் நன்மையைக் கோறி ஓர் வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது ஐரோப்பியாது நவீன நடையுடைப் பாவனைகளைப் பின்பற்ருது, தங்கள் முன்னோர்கள் அணிந்துவந்த எளிய உடையகளையே அணியவேண்டுமாம். ஆடம்பரச் செயல்களை யெல்லாம் விலக்க வேண்டுமாம்.

அமெரிகாவிலுள்ள ஐக்கிய போர்டார் ஜூலைமாதம் வெளியிட்டுள்ள விபரம்.

உலகத்திலுள்ள தங்கத்தின் பொறுமானம் 39,35,26,15 500 (39,35,26,15,500) ரூபாய் களாம். அத்தங்கம் உலகத்தில் பல்வேறு இடங்களில் தற்சமயம் பரவியிருக்கிறது.

1.	யுனைடட்ஸ்டேட்ஸ் அமெரிக்கா:	ரூ, 15,55,89,73,500
2.	பிரான்சு:—	ரூ. 981,29,92,500
3.	இங்கிலாந்து:—	ரூ. 257,22,69,000
4.	ஜெர்மனி:—	ரூ 199,28,16,000
5.	ஸ்பெயின்:—	ரூ. 163,70,02,500
6.	ஜப்பான்:—	ரூ. 147,85,71,500
7.	ஆர்ஜென்டைர்:—	ரூ. 127,10,60,000
8.	இதாலியா:—	ரூ. 97,92,75,500
9.	ரஷ்யா:—	ரூ. 91,66,32,500
10.	பெல்ஜியம்:—	ரூ. 70,44,94,000
11.	நெதர்லாண்டு:—	ரூ. 63,31,18,500
12.	இந்தியா:—	ரூ. 51,54,24,000
13.	கனடா:—	ரூ. 35,65,69,500
14.	மற்றநாடுகளில்:—	ரூ. 300,36,61,500

நீங்கள் எலக்டிரிக் வயரிங் செய்ய விரும்புகிறீர்களா?

அப்படியானல் எங்களிடம் ஓர் முறை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த கூலியில் உயர்ந்தமுறையில் வேலை செய்து தருவோம். எல்லாவகையான எலக்டிரிக் சாமான்களும் சப்ளை செய்யப்படும்.

T. R. ரெங்கசாமி.

பள்ளத்தூர்.

ராஜராஜேஸ்வரி ரக்ஷாபந்தனம்.

பூதப்பிரேத, பைசாச, ஏவல், பில்லிசூன்னியம், மாரண, முதலிய நிவர்த்தியும், இஷ்டகாரிய சித்தியும், வாக்கு நன்மையும். பிரபு ஸ்நேக விஸ்வாசமும், தொழில் அபிவிர்த்தியும், சந்தான விருத்தியும், முதலியன சித்தியுறும்.

பாலர் ஸ்திரீகள் விருத்தர் யாவரும் அணியலாம். விலை ரூ. 3. வேண்டுவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

சித்தவைத்திய பற்பொடி.

நீண்டகால பல்வியாதிகளைப் போக்கும். ஈசிர்வீங்குதல், பல் சொத்தை விழுதல், கீழ்வடிதல், வாய்நாற்றம், முதலியவைகளை நீக்கி சுகத்தைக் கொடுப்பது இதுவொன்றே. ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

டப்பி ஒன்றுக்கு விலை அணா 0-2-0 வி. பி. சார்சு வேறு

குகபதி.

சித்தவைத்தியம், மாந்திரீகம்.

நாட்டரசன்கோட்டை (இராமநாதரம் ஜில்லா.)

Regd. No. M. 2646.

மஹாதேவன் கம்பெனி,

மரச்சாமான்கள் வியாபாரம்,

கானாடுகாத்தான் (ராமநாதபுரம் ஜில்லா.)

உயர்ந்த சாமான்கள்! குறைந்த விலை!!

உங்கள் வீட்டை அலங்கரிப்பதற்கு,

எங்கள் கம்பெனியில் எல்லாவித மரச்சாமான்களும் வீடுகளின் உபயோகத்திற்கும் ஆபீஸ்களின் உபயோகத்திற்கும் உயர்ந்த பங்களாக்களை அலங்கரிப்பதற்கும் கலியாணச் சீர்களுக்கும் தகுதியான முறையில் உயர்ந்த சாமான்களைக்கொண்டு உறுதியாயும் வேலைப்பாடுகளுடனும் தேக்கு, தோதகத்தி முதலிய மரங்களில் செய்து வைத்துள்ளோம். விலை மிகக் குறைவு. தயாராக உள்ள தன்னியில் எவ்வித சாமான் வேண்டுமானாலும் மாதிரி காண்பிப்பின் குறித்தகாலத்தில் அதேமாதிரி செய்து கொடுக்கப்படும்.

ஓர் முறை வந்து எங்கள் கம்பெனியைப் பார்வையிடுங்கள்.

கம்பெனி வேலைக்கு உத்திரவாதம்.

Printed & ublished by S. RM. Ramanatha Mudaliar,
at Vedhambal Press, Pallatur. (RamnadDt.)